வானவில் | VAANAVIL
இதழ் 145 | தை 2023
ISSUE 145 | JANUARY 2023

# தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பிளவும் தமிழர் அரசியலும்




தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் மீண்டும் ஒரு பிளவு தோன்றியுள்ளது. இறுதியாக மூன்று கட்சிகள் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளாக இருந்தன. தமிழரசுக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) என்பனவே அவை. இப்பொழுது மூன்று கட்சிகளும் தனித்தனியாகப் பிரிந்துவிட்டன, அல்லது பிரிக்கப்பட்டுவிட்டன.

இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ள சூழலில் இந்தப் பிளவு ஏற்பட்டுள்ளதால் முக்கியத்துவம் உள்ளதாக இருக்கின்றது. அதனால் பதவி ஆசை காரணமாகவே இந்தப் பிளவு ஏற்பட்டுள்ளதாக வழமைபோல மலினமான முறையில் இந்தப் பிளவு குறித்துப் பலரும் கருதுகின்றனர். ஆனால் அது உண்மையல்ல.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது புலிகளால் தமது தேவை கருதி உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு என்பதை எவரும் மறைத்துவிடவும் மறந்து விடவும் முடியாது, கூடாது. புலிகள் 2009 இல் அரச படைகளால் அழிக்கப்பட்ட பின்பும் சில தேவைகள் கருதி (பதவி ஆசை காரணமாக) அந்தக் கூட்டமைப்பு நீடித்துவந்தது.

ஆரம்பத்தில் கூட்டமைப்பில் பல கட்சிகள் அங்கம் வகித்தாலும், காலத்துக்காலம் ஒவ்வொரு கட்சியாக அதிலிருந்து வெளியேறி இறுதியில் மூன்று கட்சிகளே அதில் எஞ்சி இருந்தன. கூட்டமைப்பில் காலத்துக்குக் காலம் உடைவுகள் ஏற்பட்டு அது இன்றைய வங்குரோத்து நிலையை அடைந்ததிற்கு அதன் தலைமைக் கட்சியான தமிழரசுக் கட்சியே காரணமாக இருந்து வந்துள்ளது.

கூட்டமைப்பில் பல கட்சிகள் அங்கம் வகித்தாலும், தமிழரசுக் கட்சியின் பெயரிலேயே அதன் தேர்தல் திணைக்களப் பதிவு இருக்கின்றது. தேர்தல் சின்னமாகவும் தமிழரசுக் கட்சியின் வீடு சின்னமே இருக்கின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பை தனியானதொரு அரசியல் கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும் என பங்காளிக் கட்சிகள் காலத்துக்காலம் கோரி வந்தாலும், தமிழரசுத் தலைமை அதைத் தொடர்ந்தும் தட்டிக்கழித்தே வந்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் ஆரம்பம் முதலே முரண்பாடுகள் இருந்து வந்தாலும், எம்.ஏ.சுமந்திரன் தமிழரசுக் கட்சி ஊடாக கூட்டமைப்புக்குள் வந்த பின்னரே அந்த முரண்பாடுகள் தீவிரமடைந்தன. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும், இதர தமிழ் தேசியவாதக் கட்சிகளும் புலிகளின் பெயரை வைத்தே தமது அரசியல் பிழைப்பை மக்கள் மத்தியில் நிகழ்த்தி வந்தன. தமிழரசுக் கட்சியிலும் சிலர் அதையே செய்தனர். ஆனால் சுமந்திரன் புலிகளை விமர்சிக்கும் வேலையை ஆரம்பித்தார். கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனும் சுமந்திரனின் நிலைக்கு ஆதரவாகவே இருந்தார்.

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க…

# வெற்றிகரமாக 13வது ஆண்டில் நடைபயிலும் வானவில்

நாங்கள் 'வானவில்' இதழை ஆரம்பித்தது நேற்றுப் போலவே இருக்கின்றது. எப்படியோ 12 வருடங்கள் உருண்டோடி விட்டன. மாதந்தோறும் 'வானவில்' இதழினை தொடர்ச்சியாக கொண்டு வருவதென்பது எமக்கு பெரும் சவாலாகவே உள்ளது. உண்மையைச் சொல்லப்போனால், எழுதுவதற்கு எங்களிடையே அதிகம் பேர் இல்லையென்ற காரணத்தினால் நாங்கள் சற்று சிரமப்படுகின்றோம். **நூறு பேர் எழுதினால் மாத்திரமே நூறு சிந்தனைகளை உருவாக்க முடியும்.** வெறுமனே ஆசிரியர் குழு மாத்திரம் எழுதினால், ஆசிரியர் குழுவின் சிந்தனைகளாவே பத்திரிகை இருக்கும்.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர்களிடையே வாசிப்பு என்பது குறைந்து செல்வது போலவே, சுயமாக எழுவதென்பதும் குறைந்து கொண்டே செல்கின்றது. ஏழரைக்கோடி தமிழர்கள் வாழும் தமிழ்நாட்டிலும் இதே நிலைமை இருப்பதாக கூறப்படுகின்றது. தமிழ் மொழியில் எழுதாமலும் தமிழை வாசிக்காமலும், 'ஆண்ட தமிழினம் மீண்டும் ஆள நினைப்பதில் என்ன தவறு, தமிழுக்கு அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்றெல்லாம் கத்துவதில் என்ன பிரயோசனம்?

தைத்தொலைபேசி, கணனி போன்றவற்றின் வாயிலாக குறுந்தகவல்களும் குறுஞ்செய்திகளும் உடனுக்குடன் பரிமாறிக் கொள்ளப்படும் காலகட்டத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறு பரிமாறிக்கொள்ளப்படும் தகவல்களின் நம்பத்தன்மையை நாங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கேள்விக்குட்படுத்துவது இல்லை. இது ஒருபுறமிருக்க, குறுந்தகவல்கள் மற்றும் குறுஞ்செய்திகளால் மாத்திரம் சிந்தனைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு சமூகத்தில் புரட்சிகர மாற்றங்களைக் கொண்டுவர முடியாது. தரமான கட்டுரைகளையும், அதற்கு அப்பால் புத்தகங்களையும் படிப்பதன் வாயிலாகவே சமூகப்பிரச்சனைகளை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியும்.

இலத்திரனவியல் ஊடகங்களால் பதிப்புத்துறை பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதைக் குறித்து 'தி இந்து' ராம், "இந்த மாறிவரும் சூழலுக்கேற்பத் தற்காலத்துடன் தங்களுக்கு உள்ள தொடர்பையும் தங்கள் மதிப்பையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வழக்கமான இதழியலும் செய்தித் தொழில்துறையும் உலகம் முழுவதிலுமே தடுமாறி வருகின்றன. இந்தச் சவாலை முறியடிக்க இத்துறை தன்னுடைய திறமைகளைக் கூர் தீட்டிக்கொள்வது, வலுப்படுத்திக்கொள்வது, சில முக்கியச் செயல்களைத் தொடர்ந்து மேற்கொள்ள தன்னையே மேம்படுத்திக்கொள்வது அவசியம் என்று இதழியல் துறையில் உள்ளவர்களால் கருதப்படுகிறது" என ஒருதடவை கூறியிருக்கிறார். ராமின் இந்தச் செய்தி கோர்ப்பரேட் ஊடகங்களுக்கு பொருந்தாது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இந்தியாவின் முன்னணி தனியார் செய்தி நிறுவனமான என்டிரிவியின் (New Delhi Television Ltd - NDTV) 29% பங்குகளை அதானி குழுமம் வாங்கியுள்ளதாக அறிவிப்பு வெளியாகியது. அத்துடன் மேலும் 26% பங்குகளை வாங்க திட்டமிட்டுள்ளதாகவும் அக்குழுமம் தெரிவித்திருந்தது. உலகின் மிகப்பெரிய பணக்காரர்களில் ஒருவரும், கடந்த 8 வருடங்களாக பதவியிலிருக்கும் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியின் உற்ற நண்பருமான அதானி, இந்தியாவின் முன்னணி செய்தி நிறுவனத்தையே வாங்குவதென்றால் ஊடகத்தின் வலிமை எத்தகையானது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இன்றைய மேற்குலக நாடுகளின் அனைத்து மொழி ஊடகங்களின் பிரதான செய்தியாக, கடந்த வருடம் பெப்ரவரி 24ம் திகதி உக்ரைன் மீது தொடுக்கப்பட்ட ரஷ்யாவின் விசேட இராணுவ நடவடிக்கை தொடர்பானதாகவே இருக்கின்றது. ரஷ்யா, உக்ரைன் மீதான தாக்குதலை ஆரம்பித்த முதலாவது வாரத்திலேயே, உலகம் முழுவதும் சுதந்திரமான ஊடகச் செயற்பாடுகளை ஆதரிப்பதாகக் கூறிக் கொள்ளும் மேற்குலக நாடுகள், ரஷ்யாவின் Russia Today, Sputnik என்ற முக்கிய ஊடகங்களைத் தடை செய்தார்கள். பின்னர் தங்கள் உள்ளூர் ஊடகங்கள் மற்றும் CNN, BBC, Al JAZEERA போன்ற கோர்ப்பரேட் ஊடகங்கள் (Corporate media) வாயிலாக உக்ரைன் சார்பான செய்திகளுக்கு மாத்திரமே பெரும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டு வருகின்றார்கள்.

ரஷ்ய தரப்பு செய்திகளை திட்டமிட்டு இருட்டடிப்பு செய்வது ஒருபுமிருக்க, ரஷ்யர்கள் உக்ரைன் மக்களை கொன்று குவிக்கிறார்கள், ஆனால் உக்ரைன் இராணுவம் வெற்றிவாகை சூடுகின்றது போன்ற செய்திகளையே மேற்குலக ஊடகங்கள் வெளியிடுகின்றன. இச்செய்திகளை கணிசமான மக்கள் நம்புகிறார்கள். அதனால் யுத்தத்தால் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை சகிக்கிறார்கள், உக்ரைனுக்கு பெருமளவில் ஆயுதங்களும் நிதியுதவிகளும் வழங்கப்படுவதை எதிர்க்காது இருக்கிறார்கள். உக்ரைனிற்கு ஆயுதங்கள் விற்கப்படுகின்றன, அந்த ஆயுதங்களை வாங்குவதற்கு மேற்கு ஐரோப்பிய நாட்டு மக்களின் வரிப்பணமே செலவிடப்படுகின்றது போன்ற சாதாரண உண்மைகளையெல்லாம் மக்கள் சிந்திக்காதிருப்பதற்கு இந்த ஊடகங்கள் பெரும் பங்காற்றி வருகின்றன.

அதிகாரத்திலிருப்பவர்கள் வணிக ஊடகங்களை தங்கள் கைக்குள் வைத்து, உண்மையை பொய்யாக்குவதிலும் பொய்யை உண்மையாக்குவதிலும் ஈடுபட்டிருக்கையில், 'வானவில்' போன்ற சிறு பத்திரிகையால் என்ன செய்ய முடியுமென்ற கேள்வி எழலாம். வணிக ஊடகங்களை பார்த்து அஞ்சி நடுங்கியிருந்தால், கடந்த 12 வருடங்களாக 'வானவில்' தொடர்ந்து வெளிவந்திருக்கவே முடியாது. எங்களது அர்ப்பணிப்பும், வாசகர்களிடமிருந்து எங்களுக்கு கிடைக்கும் ஆதரவுமே எங்களை 13வது ஆண்டில் காலடி வைக்க துணை புரிந்துள்ளதென்பதை அனைவரும் புரிந்து கொண்டு, எங்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து 'வானவில்' இதழ்களையும் வாசிக்கலாம்.


**புத்தாண்டு வாழ்த்துகள்!**

'வானவில்' வாசகர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# ‘ஈரானின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் தலையிடுகின்றன’ - ஈரானியத்தூதர்

1979 ஆம் ஆண்டில் ஈரானில் நடந்த இஸ்லாமிய புரட்சியில் அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் ஆதரவு ஷா (Shah) மன்னர் தூக்கியெறியப்பட்டார். ஈரான் இஸ்லாமிய குடியரசு நிறுவப்பட்டதிலிருந்து, ஈரான் அமெரிக்காவுடனும் பிரித்தானியாவுடனும் மோதலில் இருந்து வருகிறது.

1953 ஆம் ஆண்டு ஈரானின் பிரதமரரகத் தெரிவு செய்யப்பட்ட முகமது மொசாதீக் (Mohammad Mossadegh) ஈரானின் எண்ணெய் தொழில்துறையை தேசியமயமாக்கியதைத் தொடர்ந்து, அமெரிக்க மத்திய புலனாய்வு அமைப்பு (சி.ஐ.ஏ) ஏற்பாடு செய்த ஆட்சிக் கவிழ்ப்பில் ஷா நியமிக்கப்பட்டார்.

ஈரானின் எண்ணெய் வளங்களைக் கட்டுப்படுத்திய பிரிட்டன், அமெரிக்காவிடம் முறையிட்டதைத் தொடர்ந்து, ஊடக நிறுவனங்களுக்கு இலஞ்சம் கொடுத்தல், பிரதமருக்கு எதிராக தவறான பிரச்சாரத்தை விதைத்தல் மற்றும் அதிருப்தியைத் தூண்டுவதற்காக நேர்மையற்ற மதகுரு உறுப்பினர்களை சேர்த்தல் ஆகியவற்றின் மூலமாக சி.ஐ.ஏ ஓர் ஆட்சிக் கவிழ்ப்பை திட்டமிட்டது.

1953 ஆட்சிக் கவிழ்ப்பைத் தொடர்ந்து, மொசாடெக் கைது செய்யப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, தனது வாழ்நாள் முழுவதையும் வீட்டுக் காவலில் கழித்தார். 1979 ஆம் ஆண்டில் இஸ்லாமியப் புரட்சியால் தூக்கியெறியப்படும் வரை, ஷா அரியாசனத்தில் அமர்ந்து ஆட்சி செய்தார்.

ஒகஸ்ட் 19, 2013 அன்று, சி.ஐ.ஏ முதல் முறையாக 1953 ஆம் ஆண்டு ஆட்சிக்கவிழ்ப்பில் தனக்கு தொடர்பு இருப்பதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டது.

ஷா தூக்கியெறியப்பட்டு, அமெரிக்கப் பிரஜைகளை பிணைக் கைதிகளாக பிடித்து வைத்திருந்ததிலிருந்து, ஈரானையும் அதன் மக்களையும் தான் அனுபவித்த அவமானத்திற்காக அமெரிக்கா ஒருபோதும்



ஒகஸ்ட் 19, 1953 அன்று ஈரான் முழுவதும் பாரிய போராட்டங்கள் வெடித்தன, தெஹ்ரானின் தெருக்களில் நடந்த துப்பாக்கிச் சண்டைகளில் கிட்டத்தட்ட 300 பேர் வரையில் கொல்லப்பட்டனர். சி.ஐ.ஏ மற்றும் பிரிட்டிஷ் உளவுத்துறையால் திட்டமிடப்பட்ட ஓர் ஆட்சிக்கவிழ்ப்பில் உடனடியாகவே ஈரானிய பிரதமர் முகமது மொசாதீக் தூக்கியெறியப்பட்டார். ஈரானின் தலைவராக ஷா (Mohammad Reza Pahlavi / Mohammad Reza Shah) மீண்டும் நியமிக்கப்பட்டார்.

மன்னிக்கவில்லை.

ஷா பதவியிலிருந்து பதவி விலகிய பின்னர், ஈரானின் அரசாங்கம் சட்டப்பூர்வ பாதுகாவலர் என்ற தனித்துவமான கொள்கையின் அல்லது ஷரியாவின் (முஸ்லிம்களின் நாளாந்த வாழ்க்கையின் அம்சங்களை நிர்வகிக்கும் இஸ்லாமிய மத சட்டங்களின் தொகுப்பு) கீழ் ‘ஆளுநர் பதவி’யைப் பின்பற்றியுள்ளது.

ஈரான் இஸ்லாமிய குடியரசின் 1979 அரசியலமைப்பு, ‘பாதுகாவலரை’ ஈரானின் உயர் பீடத் தலைவராக்கியது. அயத்துல்லா கொமேனி இஸ்லாமியக் குடியரசின் முதலாவது உயர் பீடத் தலைவரானார்.

இதையடுத்து, அமெரிக்கா ஒருதலைப்பட்சமாக ஈரான் மீதும் அதன் மக்கள் மீதும் பொருளாதாரத் தடைகளை விதித்தது. இந்த தடைகள் வெளிநாட்டு வர்த்தகம், நிதி சேவைகள், எரிசக்தி துறைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் மீது கட்டுப்பாடுகளை விதித்ததோடு, ஈரான் அரசு மற்றும் ஈரானுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு ஐரோப்பிய ஒன்றிய காப்பீட்டு நிறுவனங்களால் காப்பீடு மற்றும் மறுகாப்பீடு வழங்குவதற்கான தடைகளையும் உள்ளடக்குகின்றன.

அமெரிக்க பொருளாதாரத் தடைகளை தொடர்ந்து, 2020 ஆம் ஆண்டில் 3.45 பில்லியன் டொலர் வர்த்தகப் பற்றாக்குறையில் ஈரான் வீழ்ந்ததாக சர்வதேச நாணய நிதியத்தின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. 2019 ஆம் ஆண்டில் அந்த நாட்டின் வர்த்தக உபரி 6.11 பில்லியன் டொலராக இருந்ததாக சர்வதேச நாணய நிதியம் (IMF) தெரிவித்துள்ளது. தெஹ்ரான் மருத்துவ விஞ்ஞானப் பல்கலைக்கழகத்தின் மருந்தியல் பேராசிரியரான அப்பாஸ் கெப்ரியாசாதே (Abbas Kebriaeezadeh) உடைய அறிக்கையொன்றின்படி, அமெரிக்க பொருளாதாரத் தடைகள் மோசமான மருந்துப் பற்றாக்குறையை உருவாக்கியும், மருந்தின் விலைகளை வானைத்தொடுமளவிற்கு அதிகரிக்கச் செய்தும், மறைமுகமாக ‘ஈரானில் புற்றுநோயாளிகளைக் கொல்கின்றன’ என்று கண்டறிந்துள்ளது.

பொருளாதாரத் தடைகளின் தாக்கம் மற்றும் பலவித சிரமங்கள் ஈரானிய மக்களை ஒருசேர அழுத்திய போதிலும், ஈரானிய மக்கள் அமெரிக்காவின் சூழ்ச்சிகள் மற்றும் வலைகளுக்கு எதிராக

அவர்களது அரசாங்கத்துடன் நிற்கின்றனர்.

இன்று, ஷாவை வீழ்த்திய புரட்சிக்கு 40 ஆண்டுகளுக்குப் பிறகு, ஈரான் மறுபடியும் கொந்தளிப்பை எதிர்கொள்கின்றது. தற்போது இடம்பெற்று வரும் இந்த அமைதியின்மை ஈரானியப் புரட்சிக்குப் பிறகு முதலாவது பெரிய எழுச்சியாகும். இந்த முறை ஈரானியர்கள் ஓர் இளம் பெண்–மஹ்சா அமினி (Mahsa Amini)– பொலிஸ் காவலில் சர்ச்சைக்குரிய வகையில் மரணமடைந்தது குறித்து தெருக்களில் இறங்கியுள்ளனர்.

முறையற்றதொரு ஹிஜாப்பை அணிந்திருந்ததாக அமினியை ஈரானின் நன்னடத்தைப் பொலீசார் முதலில் கைது செய்தனர். அவரது மரணம், அவர் கைது செய்யப்படுவதற்கு முன்னிருந்த நிலைமையின் விளைவாகும் என்று பொலீசார் தெரிவிக்கின்றனர். ஆனால், அவரது மரணம் குறித்தான விளக்கங்களை அவரது குடும்பத்தினர் ஏற்க மறுக்கின்றனர். அமினி தாக்கப்பட்டதன் விளைவாகவே அவரது மரணம் நிகழ்ந்ததாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

நவம்பர் 1 அன்று, அரசு செய்தி நிறுவனமான ஐ.எஸ்.என்.ஏ (ISNA) டெஹ்ரானில் 315 ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது குற்றப்பதிவு செய்யப்பட்டதாகவும், மாகாணங்களில் 700 இற்கும் மேற்பட்டவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டதாகவும் தெரிவித்தது.

இந்த சர்ச்சை தொடர்ந்தும் நீடித்து வரும் நிலையில், ஈரானில் நடைபெற்று வரும் போராட்டங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட ஆடையை அணியாத காரணத்திற்காக கொல்லப்பட்டதாக அறியப்படும் இளம் பெண் பொலிஸ் காவலில் இறந்தது குறித்து இலங்கையில் உள்ள ஈரானியத்தூதர் ஹாஷிம் அஷ்ஜாசாதே (Hashem Ashjazadeh) அவர்களுடன் கொழும்பிலிருந்து வெளியாகும் 'டெய்லி மிரர்' (Daily Mirror) பத்திரிகை உரையாடியது.

'பொலீஸ் காவலில் இருந்தபோது மஹ்சா அமினி துரதிர்ஷ்டவசமாக இறந்தது' அனைத்து ஈரானியர்களுக்கும் கசப்பானதும் வேதனையானதுமமன செய்தியாகும் என்று தூதர் அஷ்ஜாதே கூறினார்.

இதனையடுத்து குறித்த யுவதியின் மரணம் தொடர்பில் விசேட விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் உடனடியாக நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் ஈரானிய ஜனாதிபதி கோரியுள்ளார். அவர் மஹ்சா அமினியின் குடும்பத்தினரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, விசாரணை நடத்துவதாக உறுதியளித்துள்ளார்.

எவ்வாறெனினும், இந்த குற்றத்திற்கு எதிரான அமைதியான போராட்டங்கள், நாட்டை சீர்குலைக்கும் நோக்கத்துடன் வன்முறையில் இறங்கியிருக்கும் வெளிநாட்டு பின்னணிக் குழுக்களின் பிடியில் துரதிர்ஷ்டவசமாக சிக்கியுள்ளன.

பல துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன. அந்நிய நாடுகளுடன் தொடர்புகளைக் கொண்ட பயங்கரவாதக் குழுக்கள் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு, பிரச்சினை மேலும் சீர்கெட்டுள்ளது. ஒரு நியாயமான சிவில் போராட்டத்தின் திசையை, அந்நியர்கள் தலையிடக்கூடிய நிகழ்ச்சி நிரல்களை நோக்கி அவர்கள் நயவஞ்சகமாக மாற்றியிருக்கிறாரர்கள்.


சிவில் போராட்டத்திற்கும் ஒழுங்கமைக்கப்பட்ட வன்முறைக்கும் வேறுபாடு உள்ளது. அப்பாவி பொதுமக்களையும், பொதுச் சொத்துக்களையும் குறிவைத்து நடத்தப்படும் வன்முறைகளைத்தான் இன்று நாங்கள் காண்கின்றோம்.

பேட்டியிலிருந்து சில பகுதிகள்:

**கேள்வி: ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கக் கட்டிடங்களை மற்றும் ஆர்ப்பாட்டங்களை எதிர்ப்பவர்களைத் தாக்குவதற்கு ஒரு குறிப்பிட்ட நாட்டின் முகவர்களால் வழிநடத்தப்பட்டதாகச் சொல்கிறீர்களா? குறிப்பிட்ட சம்பவங்களைக் கூறுவதன் வாயிலாக இதனைத் தெளிவுபடுத்த முடியுமா?**

செல்வி அமினியின் துரதிர்ஷ்டவசமான மரணத்தைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற பல கூட்டங்கள் மற்றும் போராட்டங்கள் அமைதியானவை.

ஆனால், சில பகுதிகளில் வன்முறை வெடித்ததால் பதற்றமும், அழிவும் ஏற்பட்டது. எனது கருத்துப்படி, இந்த



முன்னாள் பிரதமர் முகமது மொசாதீக்

நடவடிக்கைகள் அப்போதைய பிரதமர் மொசாடெக் அரசாங்கத்தை வீழ்த்திய ஆட்சிக் கவிழ்ப்புக்கு முன்னர் அமெரிக்க சி.ஐ.ஏயினால் தூண்டப்பட்ட நிகழ்வுகளை நினைவூட்டுகின்றன.

கள நிலவரங்களின் அடிப்படையில், இந்த வன்முறைச் செயல்கள் அமெரிக்காவால் தூண்டப்பட்டவை என்று நான் நம்புகிறேன். இந்த கலவரக்காரர்களை ஆதரிப்பதன் மூலம், ஈரான் இஸ்லாமிய குடியரசின் உள்விவகாரங்களில் அமெரிக்காவும் சில மேற்கத்திய நாடுகளும் மீண்டும் தலையிடத் தொடங்கியுள்ளன.

வன்முறை கலவரங்களில் பங்கேற்பதற்கு தனிநபர்களைத் தூண்டுமாறு ஏனைய வெளிப்புற சக்திகள் – அந்நியநாட்டு – ஆதரவிலான பயங்கரவாத குழுக்கள் தங்கள் முகவர்களை வழிநடத்துகின்றன. 'பார்சி' (Farsi) மொழியில் ஒளிபரப்பாகும் இணையதளங்கள் மற்றும் வெளிநாட்டு தொலைக்காட்சி நிலையங்கள், இளைஞர்களையும் மக்களையும் வன்முறைச் செயல்களில் ஈடுபடத் தூண்டுவதில் பங்காற்றியிருக்கின்றன.

கலவரமாகவும் வன்முறையாகவும் சீரழிந்த போராட்டங்களின் போது, பயங்கரவாதக் குழுக்களுடன் தொடர்புடைய சில தனிநபர்களும், வெளிநாடுகளின் ஆதரவுடன் ஊடகங்களின் சில பிரிவுகளும் பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார்கள். அத்துடன்,

அவர்களுடன் உடன்படாத பொதுமக்களுக்கு எதிராகவும், பொலிஸ் படைக்கு எதிராகவும் மக்களை வன்முறைக்குத் தூண்டுவதன் மூலமாக வன்முறைச் செயல்களில் ஈடுபட்டனர். சில சந்தர்ப்பங்களில், அவர்கள் துப்பாக்கிகள் மற்றும் பிற தீமூட்டும் பொருட்களைப் கையாளுவதில் வன்முறையில் ஈடுபட்ட மக்களுக்கு பயிற்சி அளித்தனர்.

**கேள்வி: மொத்தத்தில், ஊடகங்களில் பரவும் செய்திகளின்படி, போராட்டக்காரர்களிடம் ஆயுதங்கள் இல்லை. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உங்கள் பதில் என்ன?**

இந்த பயங்கரமான கலவரங்களின் போது, பல பொது மற்றும் தனியார் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன அல்லது சூறையாடப்பட்டன. கலவரக்காரர்கள் பயன்படுத்திய ஆயுதங்களால் சில சட்ட அமுலாக்க முகவர்கள் மற்றும் சாதாரண மக்கள் உயிர் இழந்தனர் அல்லது காயமடைந்தனர்.

**கேள்வி: பார்சியில் ஒளிபரப்பாகும் இணையத்தளங்கள் மற்றும் வெளிநாட்டு தொலைக்காட்சி நிலையங்கள் இளைஞர்களைத் தூண்டுவதாக நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். இவ்வாறான தளங்கள் மற்றும் குறிப்பிட்ட வெளிநாட்டு தொலைக்காட்சி நிலையங்கள் சிலவற்றை நீங்கள் குறிப்பாக பெயரிட முடியுமா?**

பிபிசி பெர்சியன், வி.ஓ.ஏ, (Voice Of America) ஈரான் இன்டர்நேஷனல் (Iran International) மற்றும் மனோட்டோ (Manota) ஆகியவை சில முக்கிய வெளிநாட்டு தொலைக்காட்சி நிலையங்கள்.

**கேள்வி: இந்த போராட்டங்கள் வெடித்ததில் அந்நியத் தலையீடு இருந்ததாக நீங்கள் சொல்வதற்கு என்ன காரணம்?**

அமைதியான சிவில் போராட்டங்கள் நடந்து கொண்டிருந்தபோது, எங்கள் நாட்டை ஸ்திரமற்றதாக்கும் நோக்கத்துடன் எமது பகை நாடுகளின் ஆட்கள் கிளர்ச்சி வன்முறையை நோக்கி சிவில் போராட்டங்களை வழிநடத்தினர்.

அமைதியான போராட்ட இயக்கத்தில் ஊடுருவிய பிரிவினைவாத பயங்கரவாத அமைப்புகளால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கு, எம்முடன்



**ஈரானியத்தூதர் ஹாஷிம் அஷ்ஜாசாதே**

விரோதங்கொண்ட அந்நிய நாட்டு சக்திகளுடன் தொடர்பு இருப்பதாக அறியப்படுகிறது. இது விஷயங்களை சிக்கலாக்குகின்றது.

சிவில் போராட்டம் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட பயங்கரவாதம் அல்லது அப்பாவி பொதுமக்கள் மற்றும் பொது சொத்துக்களை குறிவைக்கும் வேறு எந்த வகையான வன்முறைக்கும் இடையே வேறுபாடு உள்ளது.

செல்வி அமினியின் மரணத்தைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற பெரும்பாலான கூட்டங்கள் அமைதியானவை.

உண்மையில் ஈரானின் ஓர் உள்நாட்டுப் பிரச்சினையில் அமெரிக்காவும் சில மேற்கத்திய சக்திகளும் தலையிடத் தொடங்கியவுடன், போராட்டக் குழுக்கள் கலவரத்தில் ஈடுபடவும் வன்முறை நடவடிக்கை எடுக்கவும் தொடங்கின.

ஆயுதமேந்திய போராளிக் குழுக்கள் போன்ற ஏனைய வெளிநபர்கள் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஆயுதங்கள் மற்றும் தீமூட்டும் பொருட்களை வழங்கி வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டினர், பொதுக் கட்டிடங்களைத் தாக்கினர், வீதித் தடைகளை ஏற்படுத்தினர், வாகனப் போக்குவரத்தைத் தடுத்தனர் மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கினை மேற்கொள்ளும் படையினரைத் தாக்கினர்.

'பார்சி' மொழியில் ஒளிபரப்பப்படும் இணையத்தளங்கள் மற்றும் வெளிநாட்டு தொலைக்காட்சி நிலையங்களும் ஆர்ப்பாட்டக்காரர்களை வன்முறைக்கு தூண்டுவதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன.

**கேள்வி: பொது/அரசு சொத்துக்களுக்கு எதிரான சில வன்முறைச் செயல்களைக் குறிப்பிட முடியுமா?**

கலவரத்தின் போது, பொது மற்றும் தனியார் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன அல்லது சூறையாடப்பட்டன. ஒரு சில சட்ட அமுலாக்க முகவர்கள் மற்றும் பார்வையாளர்கள் ஆயுதமேந்திய கலகக்காரர்களால் உயிர் இழந்தனர் அல்லது காயமுற்றனர். வங்கிகள், ஏ.டிஎம்.கள் (ATMs) மற்றும் அவசர சிகிச்சை வாகனங்கள் (நோயாளிகளை இடமாற்றம் செய்வது உட்பட) போன்ற பொது சேவைகள் தாக்கப்பட்டன. பொது போக்குவரத்து, பொலீஸ் மோட்டார் வாகனங்கள், தீயணைப்பு இயந்திரங்கள் மற்றும் மத இடங்கள் ஆகியவையும் ஒழுங்கமைக்கப்பட்ட தாக்குதல்களுக்கு உட்பட்டன. அவைகளில் பல எரிந்து சாம்பலாயின.

ஈரானில், அமைதியான முறையில் போராடுவதற்கான மக்களின் உரிமையை நாங்கள் அங்கீகரிக்கிறோம். துரதிர்ஷ்டவசமாக, வெளிநாட்டு சக்திகளின் தலையீடு அமைதியான போராட்டங்களின் திசையை மாற்றியது. இது பலரது மரணங்கள் மற்றும் அழிவுக்கு வழிவகுத்தது.

ஒகஸ்ட் 19, 1953 அன்று, சி.ஐ.ஏ நிதியளித்து ஏற்பாடு செய்த தெரு ஆர்ப்பாட்டங்கள், மொசாதீக்கை அகற்றி ஷாவை ஈரானின் தலைவராக நியமித்தது என்பதை நாம் நன்கு நினைவில் வைத்திருக்கிறோம்.

ஆரம்ப ஆட்சிக் கவிழ்ப்பு தோல்வியுற்றபோது நாட்டை விட்டு வெளியேறிய ஷா, உடனடியாக நாடு திரும்பி, அதிகாரத்தைக் கைப்பற்றி, தனது நன்றிக்கடனை காண்பிதற்காக ஈரானின் எண்ணெய் வயல்களில் 40 சதவீதத்திற்கும் அதிகமானவற்றை அமெரிக்க நிறுவனங்களுக்கு வழங்கி கையொப்பமிட்டார்.

தற்போதைய தெரு ஆர்ப்பாட்டங்களின் ஊடுருவல் மற்றும் நடந்து வரும் வன்முறை ஆகியவை ஈரானை ஸ்திரமற்றதாக்கி, மற்றொரு கைப்பொம்மை ஆட்சியை நிறுவி, ஈரானின் எண்ணெய் வளங்களைக் கட்டுப்படுத்தும் அமெரிக்காவின் முயற்சிகளின் தொடர்ச்சியாகும்.

**பேட்டி: சேர்ளி கந்தப்பா (Shirley Candappa)**

**தமிழில்: வானவில்**

# பெலே காற்பந்தாட்ட உலகின் முடிசூடா மன்னன்

காற்பந்து உலகின் கடவுளாக மதிக்கப்பட்டு உலகமெங்கிலும் ஆராதிக்கப்பட்ட ஒரு பெரும் கலைஞர் தன் வாழ்க்கைப் பயணத்தை 29.12.2022 அன்று நிறைவு செய்திருக்கிறார். இந்த பயணம் அவருக்கு அத்தனை சுலபமானதாக இருந்திருக்கவில்லை. எத்தனையோ வலிகள், எத்தனையோ வீழ்ச்சிகள் அத்தனையையும் கடந்துதான் இவர் கடவுளாக மாறினார்!

வரலாற்று நாயகர் பெலே (Pelé) ஒருமுறை இவ்வாறு கூறினார். 'பீத்தோவன் (Beathoven) எப்படி இசைக்காக பிறந்தாரோ அதேபோல் நான் காற்பந்தாட்டத்திற்காக பிறந்தேன்' இது ஆணவத்தால் சொல்லப்பட்ட வார்த்தைகள் அல்ல. இப்படி ஓர் ஒப்பீட்டை அவர் செய்திருக்காவிட்டாலும் பின்னாளில் உலகம் நிச்சயம் செய்திருக்கும். அவர்தான் காற்பந்தாட்ட உலகின் முடிசூடா மன்னனாக இன்றும் விளங்கும் ஈடு இணையற்ற 'தி கிரேட்டஸ்ட்' (The Greatest) காற்பந்தாட்ட வீரர் பெலே.

1940 ஆம் ஆண்டு அக்டோபர் 23ந்தேதி பிரேசிலின் Tres Coracoes என்ற பகுதியில் ஓர் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார், Edison Arantes do Nascimento எனப்படும் பெலே. அவரது தந்தை அமெச்சூர் காற்பந்தாட்ட வீரராக இருந்தவர். அவரது முழங்காலில் காயம் ஏற்படவே, அவர் காற்பந்தாட்டத்தை விட வேண்டிய நிலை ஏற்பட்டது. பெலேவுக்கு நான்கு வயதானபோது அவரது குடும்பம் Bauru என்ற பகுதிக்கு குடிபெயர்ந்தது. பெலேயும் அந்த வட்டாரத்தில் வசித்த சிறுவர்களும் காலுறையில் செய்தித்தாள்களை திணித்து ஒரு பந்துபோல் செய்து அதனைக்கொண்டு காற்பந்து விளையாடி மகிழ்வர். காலை முதல் மாலை வரை விளையாடுவார்கள். பெலேயின் தந்தையே அவருக்கு காற்பந்தாட்ட நுணுக்கங்களை கற்றுத்தந்தார். காற்பந்து ஆடாத நேரங்களில் பிறரது காலணிகளுக்கு பொலிஷ் போடும் வேலை செய்தார் பெலே.

பெலேயின் திறமை Bauru நகர காற்பந்து குழுவில் அவருக்கு ஓர் இடத்தைப் பெற்று தந்தது. அடுத்த மூன்று ஆண்டுகளும் ஜூனியர் பிரிவில்,



வெற்றியாளர் விருதை வென்றது அந்தக்குழு. அதன்பிறகு உயர்நிலை கழகங்களிடையேயான காற்பந்தாட்டம் அவரை அழைத்தது. Santos குழுவில் சேர்ந்தார் பெலே. சேர்ந்த முதல் ஆண்டிலேயே சாதனை அளவாக பதினேழு கோல்களைப் புகுத்தினார். அவரது அபாரத்திறன் 1958 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண போட்டிகளில் பிரேசில் தேசியக் குழுவில் இடம்பெற்றுத் தந்தது. அந்த ஆண்டு இறுதிப்போட்டியில் சுவீடனை 2:5 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி உலகக் கிண்ணத்தை முதன் முறையாக வென்றது பிரேசில். அந்த வெற்றிக்கு நடுநாயகமாக விளங்கியது பெலேயின் அபாரத்திறன்தான். உலகக் கிண்ணத்தை அவர் வென்றபோது அவருக்கு வயது பதினேழுதான்.

அவர் திடலில் இருந்தாலே எதிர்தரப்பினரின் முழங்கால்கள் வலுவிழந்து போகுமாம். திடல் முழுவதும் ஆட்டத்தை உணர்ந்து ஆடும் பாங்கு, கண கச்சிதமாக பந்தை பாஸ் செய்யும் முறை, இலாவகமாக இரண்டு மூன்று தற்காப்பு ஆட்டக்காரர்களை ஏமாற்றி முன்னேறும் திறன், தலையாலும், மார்பாலும், தொடையாலும் பந்தை கட்டுப்படுத்தும் மந்திரம், குறி தவறாமல் பந்தை வலை சேர்க்கும் தந்திரம் என இவற்றால் காற்பந்து இரசிகர்களை கிறங்கச் செய்தார் பெலே. 1970 ஆம் ஆண்டில் மெக்ஸிகோவில் நடைபெற்ற உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் அபரிமிதமான திறன் காட்டி 4:1 என்ற கோல் கணக்கில் இத்தாலியை வீழ்த்தி பிரேசில் மூன்றாவது முறையாக உலகக் கிண்ணத்தை பெற உதவினார் பெலே. அந்த ஆட்டத்தில் அவர் தலையால் முட்டிப் போட்ட கோல்தான் மறக்க முடியாதது என்று ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார் பெலே.

பிரேசில் மூன்றாவது முறையாக உலகக் கிண்ணத்தை வென்ற மறுநாள் 'the sunday times' இந்த தலையங்கத்தை வெளியிட்டது. How do u Spell Pele?? G-O-D. பிரேசிலுக்கு மூன்று உலகக் கிண்ணங்களைப் பெற்றுத் தந்த பெலே 1970 ஆம் ஆண்டு தேசியக் குழுவிலிருந்து ஓய்வு பெற்றார். ஆனால் தொடர்ந்து சாண்டோஸ் குழுவுக்கு ஆடினார். 1974 ஆம் ஆண்டு காற்பந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். ஆனால் அமெரிக்காவின் 'நியூயார்க் சிட்டி கொஸ்மாஸ்' (New York Cosmos) காற்பந்துக் குழுவின் தலைவர் தனது குழுவுக்காக விளையாடும்படி

கேட்டுக்கொண்டார். பெலே தன் குழுவுக்கு ஆடினால் அமெரிக்காவில் காற்பந்தாட்ட மோகம் ஏற்படும் என்று அவர் நம்பினார். பெலேயும் இரண்டு ஆண்டுகள் அமெரிக்கர்களுக்கு தன் காற்பந்தாட்டத் திறமையைக் காட்டி 1978 ஆம் ஆண்டு காற்பந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெற்றார். காற்பந்தாட்டத்தை அமெரிக்காவில் பிரபலப் படுத்திய பெருமை பெலேயையே சாரும். அவரது ஓய்வு அறிவிப்பு நிகழ்ச்சியில் 25 நாடுகளைச் சேர்ந்த 761 பத்திரிக்கையாளர்களும், சில நாட்டுத் தலைவர்களும் கலந்துகொண்டு அவருக்குப் பிரியா விடை அளித்தனர்.

22 ஆண்டுகால காற்பந்தாட்ட அத்தியாயத்தில் மொத்தம் 1282 கோல்களைப் புகுத்தினார் பெலே. ஹாட்ரிக் எனப்படும் ஒரே ஆட்டத்தில் தொடர்ந்து மூன்று கோல்கள் போடுவதிலும் உலகச் சாதனையை செய்திருக்கிறார். அவர் போட்டிருக்கும் மொத்த ஹாட்ரிக்குகள் 92. காற்பந்தாட்ட உலகின் ஆகச் சிறந்த வீரராக கருதப்படும் அவரை 'கறுப்பு முத்து' என்றும் பத்திரிக்கையாளர்கள் அழைத்தனர். எங்கே வேறு ஒரு நாட்டின் குடியுரிமையை அவர் ஏற்றுக்கொண்டு விடுவாரோ? என்று அஞ்சிய பிரேசில் பெலேயைத் தேசியப் புதையலாக அறிவித்தது. 1978 ஆம் ஆண்டு அவருக்கு அனைத்துலக அமைதி பரிசு வழங்கப்பட்டது. இருபதாம் நூற்றாண்டு முடிவதற்கு இருபது ஆண்டுகள் இருந்தபோதே பெலேவை அந்த நூற்றாண்டின் ஆகச் சிறந்த விளையாட்டு வீரராக அறிவித்தது அனைத்துலக ஒலிம்பிக் குழு.

பெலே என்ற சகாப்தத்தால் ஒரு போரையே நிறுத்த முடிந்தது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?! 1970 ஆம் ஆண்டு லாகோஸில் நிகழ்ந்தது அந்த அதிசயம். பெலேவின் ஆட்டத்தை காண்பதற்காக அப்போது நைஜீரியாவில் உள்நாட்டுப்போரில் ஈடுபட்டிருந்த இரண்டு குழுக்கள் 48 மணிநேர போர் நிறுத்தத்தை அறிவித்தன. அது ஆச்சரியமென்றால் இதைக் கேளுங்கள், ஆறாம் போப்பாலை சந்திக்க சென்றார் பெலே. அப்போது போப் பெலேயைப் பார்த்து உங்களுக்கு ஏன் நடுக்கம்? நீண்ட நாட்களாக உங்களைச் சந்திக்க வேண்டும் என விரும்பிய எனக்குதான் அதிக நடுக்கமாக இருக்கிறது என்றாராம்.

விளையாட்டுத் துறையில் ஈடுபடும் பல வீரர்கள் பொதுவாகத் தங்களுக்குத் தாங்களே பெருமைத் தேடிக்கொள்கின்றனர். ஆனால் ஒருசிலர்தான் அந்த விளையாட்டுத் துறைக்கே பெருமைத் தேடித் தருகின்றனர். அந்த ஒரு சிலரில் பெலேயின் பெயரும் அடங்கும். சிறுவயதில் காலணிகளுக்கு பொலிஷ் போட்ட ஒரு சிறுவன், பின்னாளில் தன் கால்களால் விளையாட்டு உலகை மெய் மறக்கச் செய்த கதைதான் பெலேயின் கதை. 'காற்பந்தாட்டம்' என்ற வானம் அவருக்கு வசப்பட்டதற்கு கடின பயிற்சியும் திறமையும், தன்னடக்கமும், சுயக்கட்டுப்பாடும்தான் முக்கிய காரணங்கள். இதே காரணங்களை நாமும் பின்பற்றினால் நமக்கும்கூட நாம் விரும்பும் வானம் வசப்படும்.

நன்றி: வானம் வசப்படும்

# ஒரே ஆண்டில் உலகில் 10 கோடி பேர் இடப்பெயர்வு



**2022** ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகளால் 10 கோடி (100 மில்லியன்) மக்கள் இடம் பெயர்ந்தனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் நல உயர் ஆணையம் தெரிவித்திருக்கிறது. வன்முறை, சச்சரவுகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இந்த இடம் பெயர்வுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் இது போன்ற நெருக்கடிகளை மக்கள் சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. 2021 ஆம் ஆண்டிலும் இத்தகைய நெருக்கடிகள் இருந்தன. அப்போது 9 கோடி மக்கள் தங்கள் சொந்த இடங்களிலிருந்து வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டனர். 2022 ஆம் ஆண்டில் நிலைமை மோசமாகியிருப்பதையே இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை காட்டுகிறது.

2022 ஆம் ஆண்டில் அதிக அளவு மக்கள் இடம் பெயர்ந்த நாடுகளின் பட்டியலில் உக்ரைன், யேமன், எத்தியோப்பியா, பர்க்கினா ஃபாசோ (Burkina Faso), சிரியா, மியான்மர் ஆகிய நாடுகள் உள்ளன. 2022 ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஆரம்பித்த ரஷ்யாவின் போர் நடவடிக்கைக்குப் பிறகு மட்டுமல்ல, இதற்கு முன்பும் உக்ரைனில் நிலவிய உள்நாட்டுக் குழப்பத்தால் மக்கள் வேறு இடங்களுக்கு மாறினர். சிரியாவில் அந்நாட்டு அரசுக்கு எதிரான தீவிரவாதிகளை ஒடுக்கி விட்டாலும், அமெரிக்க ஆதரவு தீவிரவாதிகள் இன்னும் இயங்கி வருகின்றனர். இந்த இடப்பெயர்வு குறித்துக் கருத்து தெரிவித்த ஐ.நா. அகதிகள் நல உயர் ஆணையத்தின் தலைவர் ஃபிலிப்போ கிராண்டி (Filippo Grandi), "இதுவரைக்கும் இந்த எண்ணிக்கையில் இடப் பெயர்வு ஏற்பட்டதேயில்லை. கடந்த ஆண்டை விட இது பெரிய எண்ணிக்கையாகும். வன்முறைகள் மற்றும் தொடரும் போர்கள் ஆகியவையே இந்த இடப்பெயர்வுகளுக்குக் காரணமாக அமைந்துள்ளன. சில நாடுகளில் எண்ணிக்கை அதிகமாக உள்ள நிலையில், உலகம் முழுவதும் இந்த அவலம் நிலவுகிறது'' என்று தெரிவித்தார். இடம் பெயர்பவர்களில் பெரும்பாலானவர்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளை நோக்கியே செல்கின்றனர். அங்கு சென்றால் தங்கள் வருங்காலம் பாதுகாப்பாக இருக்கும் என்று நினைத்தே அங்கு செல்ல விரும்புகிறார்கள். மக்களின் இந்த உணர்வைத் தவறாகப் பயன்படுத்துபவர்களும் உள்ளனர்.

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# அமெரிக்கா: கைதிகளின் கூடாரமா?



உலகத்தின் ஒட்டுமொத்த சுதந்திரத்தின், மனித உரிமையின் சொந்தக்காரன் நான்தான் என்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கொட்டமடித்துக் கொண்டிருக்கும் அமெரிக்காவின் பிரச்சாரங்கள் போலியானது என்பது அனைவரும் அறிந்ததே.

இராணுவ மேலாதிக்கத்தை வைத்துக்கொண்டு, உலகின் பல்வேறு நாடுகளில் ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், லிபியா, சிரியா மற்றும் தென் அமெரிக்கா நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுவதாகத் தலையிட்டு பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது அமெரிக்கா என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

உலகத்தில் தனது இராணுவ மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதற்காக அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்யும் முதல் நாடு அமெரிக்கா தான். 2022 ஆம் நிதியாண்டில் அமெரிக்காவின் ஆறு பாதுகாப்பு துறை அமைப்புகளுக்கு (departments of defence) ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி 1.64 ட்ரில்லியன் டொலர் (1640 பில்லியன் டொலர்) ஆகும்.

அமெரிக்காவின் காவல்துறை மட்டுமே பெறக்கூடிய நிதி ஒதுக்கீடு, உலக இராணுவத்தில் அதாவது அமெரிக்கா மற்றும் சீனாவிற்கு அடுத்து மூன்றாவது இடத்தை பிடிக்கிறது .

நியூயார்க் நகர காவல் துறை (NPYD) 8.4 மில்லியன் (80 இலட்சம்) மக்களுக்கு சேவை செய்கிறது. இதற்காக ஒதுக்கப்படும் நிதி 5.5 பில்லியன் டொலர் ஆகும். 98.17 மில்லியன் (சுமார் 10 கோடி) மக்கள் தொகை கொண்ட வியட்நாம் நாடு இதே அளவுக்கான தொகையைத்தான், ஒட்டுமொத்த இராணுவத்திற்கும் செலவு செய்கிறது.

அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் பார்வையில் வடகொரியா இராணுவ மயமாக்கப்பட்ட ஒரு சர்வாதிகார நாடாகும். சுமார் 26 மில்லியன் மக்கள் (2 கோடி 60 இலட்சம்) வாழும் வடகொரியாவின் மொத்த இராணுவ பட்ஜெட் சுமார் 1.6 பில்லியன் டொலர் ஆகும். ஆனால் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் காவல்துறை (LAPD) 3.85 மில்லியன் (38 இலட்சம்) மக்கள் தொகை வசிக்கும் நகரத்திற்கான காவல்துறை ஆகும். இந்த காவல்துறைக்கு ஆண்டு பட்ஜெட் 1.9 பில்லியன் டொலர் ஆகும். இது வடகொரிய நாட்டின் ஒட்டு மொத்த இராணுவ செலவைவிட அதிகமானதாகும்.

ஒட்டுமொத்தமான சமூகத்தையே கட்டுப்படுத்த கூடிய அளவுக்கு காவல்துறை அமைப்புகள் செயல்படுகிறது. குறிப்பாக கறுப்பின மக்களுக்கு எதிராக செயல்படும் முறைகள் அனைத்தும் மனித உரிமை மீறல்களை ஆகும்.

***அ.பாக்கியம்***

உலக மக்கள் தொகையில் அமெரிக்காவின் பங்கு 4% மட்டுமே. ஆனால் கைதிகளில் 20 முதல் 25 சதம் வரை அமெரிக்காவின் பங்காக இருக்கிறது. ஒப்பீட்டு அளவில் அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் சீனாவை சர்வாதிகார நாடு என்றும், மனித உரிமைகளை மீறும் நாடு என்றும் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். ஆனால் உலக மக்கள் தொகையில் 18.5% பங்கு உள்ள சீனாவின் கைதிகள் 15 சதவீதம் மட்டுமே. 194 நாடுகள் உள்ள கைதிகளை எண்ணிக்கையை ஒப்பிட்டால், அமெரிக்காவின் சிறைக்கைதிகள் அதைவிட அதிகமாக இருக்கிறார்கள்.

இரண்டாம் உலகப்போர் நடந்த உச்சகட்ட காலத்தில் சோவியத் யூனியனில் போர் கைதிகளையும் சேர்த்து 2.5 மில்லியன் கைதிகள் இருந்துள்ளார்கள். அமெரிக்காவின் கைதிகள் இதை கடந்து செல்லும் நிலையில் உள்ளனர். பெரும்பாலானவர்கள் வன்முறை காரணங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். ஒட்டுமொத்த கைதிகளில் 67% பேர் விசாரணை கைதிகளாக உள்ளனர். பிணை பெறுவதற்கான தொகை என்பது ஒரு ஏழையின் 8 மாத ஊதியமாக இருப்பதால் வசதியற்றவர்கள் பிணையில் வெளிவர முடியாத நிலைமை உள்ளது.

முதலாளித்து வர்க்கத்தின் சிறந்த நலன்களுக்காக, பொருளாதார சமூக மற்றும் அரசியல் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு அமெரிக்க அரசு, காவல் துறையையும் சிறைவாசத்தையும் நம்பி இருக்கிறது.

அமெரிக்க தனியார் சிறைகளில் உள்ள கைதிகள் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகின்றனர். மேலும் புலம்பெயர்ந்தோர் அடைக்கப்பட்டுள்ள தனியார் தடுப்பு சிறைகள் நிலைமை மோசமாக உள்ளது.

2019 ஆம் ஆண்டில், 1,16,000 (பெப்ரவரி 4, 2021 அன்றைய ஐக்கிய நாடுகள் செய்திகள்) அமெரிக்கக் கைதிகள் தனியாரால் இயக்கப்படும் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இது மொத்த கைதிகளில் 16 சதவிகிதத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. 2021 ஆண்டு செப்டம்பர் மாதம் வரை மெக்ஸிகோ எல்லையில் 1.7 மில்லியனுக்கும் அதிகமான புலம்பெயர்ந்தோரை அமெரிக்க அதிகாரிகள் தடுப்புச் காவலில் வைத்துள்ளனர். அவர்களில், 45,000 குழந்தைகள் உட்பட, 80 சதவீதம் பேர் தனியார் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிக்கை கூறுகிறது.

அமெரிக்காவில் உள்ள பெரும்பாலான தடுப்பு சிறைகள் தனியார் நிறுவனங்களால் கட்டப்பட்டு இயக்கப்படுகின்றன. செலவுகளைக் குறைப்பதற்கும், இலாபத்தை அதிகரிப்பதற்கும், தனியார் நிறுவனங்கள் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு குறைந்தபட்ச தரங்கள் இல்லாமல் கட்டமைக்கின்றன. இதன் விளைவாக மோசமான, கடுமையான உளவியல் பாதிப்பு ஏற்படுகிறது.

அரசின் கண்காணிப்பு குறைபாடுகளால் தடுப்பு சிறைகளில் வசதிகள் குறைவாகவும், குழப்பமான நிர்வாகம் நடப்பதற்கும்,மனித உரிமைகளை மீண்டும் மீண்டும் மீறுவதற்கும் வழிவகுக்கிறது.

சிறைச்சாலை உணவு மற்றும் சுகாதார சேவைகளை நடத்துவதற்கான ஒப்பந்தங்களை தனியார் பெருநிறுவனங்களுக்கு கொடுக்கிறார்கள். இந்தத் தொழில்களில் சிறைத் தொழிலாளர்களைச் குறைந்த கூலிக்கு சுரண்டுவது மூலம் அதிக இலாபத்தை தனியார் நிறுவனங்கள் அடைகிறது.

2017 ஆம் ஆண்டின் ஆய்வின்படி, சிறைத் தொழிலில் பெரும்பாலான நிறுவனங்கள் கைதிகளுக்கு சராசரியாக ஒரு நாளைக்கு 86 சதம் முதல் $3.45 வரை ஊதியம் வழங்குகிறார்கள். குறைந்தபட்சம் ஐந்து அமெரிக்க மாநிலங்களில் இது போன்ற சிறைத் தொழில்கள் உள்ளன. இங்கு உள்ள சிறைக்கைதிகள் தனியார் நிறுவனங்களால் அடிமைகளைப் போன்றே நடத்தப்படுகிறார்கள்.

பல பன்னாட்டு நிறுவனங்களும் இலாபத்தை அதிகரிக்க, அமெரிக்க சிறைத் தொழிலாளர்களைப் பயன்படுத்தி பெரும் லாபத்தை ஈட்டுகின்றனர். தொற்றுநோயின் உச்சத்தில் COVID-19 ஐ எதிர்த்துப் போராட, நாடு முழுவதும் உள்ள சிறைகளில் கைதிகள் முககவசம் மற்றும் கைசுத்திகரிப்பு பொருட்களை தயாரித்தனர்.

தனியார் நிறுவனங்கள் கைதிகளைக் கொண்டு நாட்டின் உள்கட்டமைப்பு பணிகளிலும், தீயணைப்பு பணிகளிலும், ஏராளமான கட்டுமான பணிகளிலும், பண்ணைகளிலும் வேலை செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறார்கள். ஏலம் எடுப்பதன் மூலமாக இந்த கைதிகளை பயன்படுத்தி, குறைந்த கூலி கொடுத்து அதிக இலாபம் சம்பாதிக்கிறார்கள். என்னதான் வேலை செய்தாலும் விடுதலையான பிறகு கைதிகளுக்கு வேலை கிடைப்பதில்லை.

மனித உரிமைகளை பற்றியும், உலக சுதந்திரத்தை பற்றியும் பேசிக்கொண்டே நேட்டோ (NATO) அமைப்புகள் மூலமாக உலகத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர யுத்தங்களை தொடுத்தும் இராணுவ தளவாடங்களை உற்பத்தி செய்தும் உலக மக்களின் வாழ்வை சீரழித்து வருகிறது அமெரிக்கா.

அதே நேரத்தில் உள்நாட்டில் மக்களை காவல்துறையின் கட்டுப்பாட்டுகுள்ளும், சிறைத் தொழில்கள் மூலமும் ஒட்டுமொத்த முதலாளித்துவத்தின் நலன்களை பேணி காத்து வருகிறது.

# கொலம்பியாவின் வரலாற்றில் புதிய அத்தியாயம்

**கொ**லம்பியாவில் அரசுக்கும், தேசிய விடுதலைப் படைக்கும் இடையிலான முதல்கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை நிறைவு பெற்றிருக்கிறது. கொலம்பியாவில் சர்வாதிகாரத்தையும், வலதுசாரி ஆட்சியாளர்களையும் எதிர்த்த இடதுசாரிக் குழுக்கள், ஆயுதந்தாங்கியும் போராடி வந்தன. இந்தக் குழுக்களும், கொலம்பிய அரசும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று தொடர்ந்து கோரிக்கைகள் எழுந்து வந்தன. மெக்சிகோவில் ‘அம்லோ’(AMLO) என்று அழைக்கப்படும் ஆண்ட்ரூஸ் மானுவல் லோபஸ் ஓப்ரடார் (Andrés Manuel López Obrador) ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பிறகு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டார். இதன் பலனாக தற்போது தேசிய விடுதலைப் படைக்கும், கொலம்பிய அரசுக்கும் இடையில் முதல் கட்டமாகப் பேச்சுவார்த்தை நடந்துள்ளது.



வெனிசுலாவின் (Venezuela) தலைநகரான கரகாசில் (Caracas) இந்தப் பேச்சுவார்த்தை நடந்தது. இந்தப் பேச்சுவார்த்தையின் நிறைவில், மிக முக்கியமான இந்த நிகழ்வை நாங்கள் கொண்டாடுகிறோம் என்று வெனிசுலாவின் ஜனாதிபதியான நிகோலஸ் மதுரோ (Nicolás Maduro) தெரிவித்தார். தங்களின் பேச்சுவார்த்தையின் நிறைவில், இரு தரப்பும் ஒரு கூட்டறிக்கையையும் வெளியிட்டனர். தங்கள் பேச்சுவார்த்தை பரஸ்பர மரியாதையுடனும், வெளிப்படைத் தன்மையுடனும் மற்றும் உளப்பூர்வமாகவும் இருந்தது என்று தெரிவித்திருக்கிறார்கள். கொலம்பியாவில் இடதுசாரிக் கொள்கைகளை முன்னிறுத்திய குஸ்ரவோ பெட்ரோ (Gustavo Petro) ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பிறகு, அமைதிப் பேச்சுவார்த்தைகள் தீவிரமடைந்தன.

இந்தப் பேச்சுவார்த்தை வெனிசுலாவுக்கும், அந்நாட்டு மக்களுக்கும் மிகவும் முக்கியமான நிகழ்வு என்று கூறியுள்ள நிகோலஸ் மதுரோ, “நாங்கள் இந்தப் பேச்சுவார்த்தையை நடத்தித் தரும் வாய்ப்பைப் பெற்றதற்கு மகிழ்ச்சியடைகிறோம். பேச்சுவார்த்தையும் சாதகமான கருத்துகளோடு நிறைவு பெற்றிருக்கிறது” என்று குறிப்பிட்டார். இதற்கு முன்பும் பேச்சுவார்த்தைகள்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# சிக்கலாகும் இந்திய – சீன எல்லைப் பிரச்னை – தீர்வுதான் என்ன?

## -ஓர் இந்தியக் கண்ணோட்டம்

‘டிசம்பர் 9 அன்று சீனத் துருப்புகள் எல்லை தாண்டின. அருணாசலப் பிரதேச மாநிலத்தில் தவாங் எனும் பகுதிக்குள் ஊடுருவின. இந்திய வீரர்கள் தடுத்தனர். கைகலப்பு ஏற்பட்டது. இரு தரப்பிலும் வீரர்கள் காயமடைந்தனர். சீனத் துருப்புகள் பின்வாங்கின. நிலைமை கட்டுக்குள் வந்துவிட்டது’ – இந்திய இராணுவம் கடந்த டிசம்பர் 12ம் திகதி வெளியிட்ட அறிக்கையின் சாரம் இதுதான்.

அடுத்த நாள் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசியதன் உள்ளடக்கமும் இதுதான். இதற்குப் பிறகு சீன இராணுவமும் இந்தச் சம்பவத்தைப் பற்றிப் பேசியது. அது கைகலப்பு நடந்ததை மறுக்கவில்லை. நிலைமை கட்டுக்குள் வந்துவிட்டது என்பதையும் மறுக்கவில்லை. ஆனால், எல்லை தாண்டியது இந்திய வீரர்கள் எனவும், தடுத்தது சீன வீரர்கள் எனவும் சொல்லியது.

இந்தச் சம்பவத்தை எழுதிய பன்னாட்டு ஊடகங்கள் அனைத்தும் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னால், 2020 ஜூன் 15 அன்று கால்வான் (Galwan) பள்ளத்தாக்கில் நடந்த கைகலப்பையும், அதில் 20 இந்திய வீரர்கள் கொல்லப்பட்டதையும் நினைவுகூர்ந்தன. கால்வான் சம்பவத்திற்குப் பிறகு நடக்கும் கைகலப்பு இது என்றும் எழுதின. இந்தக் கூற்றுகள் சரியானவைதாம். ஆனால், கால்வான் எல்லை மீறலுக்கும் தவாங் எல்லை மீறலுக்கும் பெரிய வேறுபாடு இருக்கிறது.

**அரங்குகள் மூன்று**

இந்திய – சீன எல்லைப் பகுதியை அரசியல் நோக்கர்கள் மேற்கு அரங்கு, கிழக்கு அரங்கு, நடு அரங்கு என்று மூன்றாகப் பிரிக்கிறார்கள். இதில் சிக்கிமையும் உத்தரகாண்டத்தையும் ஒட்டிய நடு அரங்கில் பெரிய கருத்து வேற்றுமைகள் இல்லை. மேற்கு அரங்கில்தான் லடாக் (Ladakh) இருக்கிறது. லடாக்கை அடுத்துள்ள ஆக்சை–சின் (Akshai-Chin) சீனாவின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இந்தப் பகுதிக்கு இந்தியா உரிமை கோருகிறது. ஆக்சை–சின்னை அடுத்துத்தான் உய்குர் முஸ்லிம்கள் வாழும் சீனாவின் சின் ஜியாங் மாநிலம்




இருக்கிறது. ஆகவே சீனாவிற்கு இது நிலவியல் ரீதியாக முக்கியமானது. கால்வான் பள்ளத்தாக்கு மேற்கு அரங்கில்தான் இருக்கிறது.

*மு.இராமநாதன்*
*(பொறியியலாளர்)*

கிழக்கு அரங்கில் அருணாசலப் பிரதேசம் இருக்கிறது. இங்குள்ள தவாங் பகுதியில்தான் இப்போதைய எல்லை தாண்டல் நிகழ்ந்தது. தவாங் திபெத்திய புத்த மதத்தினருக்குப் புனிதத் தலம். ஆறாம் தலாய்லாமா இங்கேதான் பிறந்தார். இப்போதைய 14ம் தலாய்லாமாவுக்கு இந்தியா புகலிடம் வழங்கியிருக்கிறது. 1959ல் அவர் திபெத்திலிருந்து இந்தியாவுக்கு மேற்கொண்ட ரகசியப் பயணத்தின் இடைவழியில் தவாங் மடாலயம் அவருக்குச் சில நாட்கள் அடைக்கலம் அளித்தது. ஆதியில் திபெத் தொடர்புகளைச் சுட்டிக்காட்டி தவாங் பகுதிக்கு உரிமைகோரி வந்தது சீனா. பிற்பாடு மொத்த அருணாசலப் பிரதேசத்திற்கும் தனது உரிமை கோரலை நீட்டித்தது. அருணாசலப் பிரதேசத்தைக் கிழக்கு திபெத் என அழைக்கத் தொடங்கியது. எனினும் இதுகாறும் சீனா, மேற்கு அரங்கில் குரலையும் ஆயுதத்தையும் உயர்த்திய அளவுக்கு கிழக்கில் உயர்தவில்லை. இப்போது அந்தப் போக்கில் மாற்றம் வந்திருக்கிறது. ஏன்?

நடப்புக் கட்டுப்பாட்டுக் கோடு, இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் தீர்மானமான எல்லைக்கோடு இல்லை. ஆங்கிலேயர்கள் வரைந்த எல்லைக் கோட்டிற்கு ‘மக்மோகன் கோடு’ என்று பெயர். 1947ல் விடுதலை பெற்ற இந்தியா, இந்தக் கோட்டை சுவீகரித்துக்கொண்டது. 1949ல் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் உருவான சீனா, இந்தக் கோட்டை ஏற்கவில்லை. அன்று முதல் பிணக்கு நீடிக்கிறது. 1962ல் நடந்த போரில் சீனா, மக்மோகன் கோட்டைத் தாண்டியது. மேற்கே அக்சை–சின்னைக் கடந்து லடாக்கிலும், கிழக்கே அருணாசலப் பிரதேசத்திலும் நுழைந்தது

எனினும், போரின் முடிவில் அருணாசலப் பிரதேசத்திலிருந்தும் லடாக்கிலிருந்தும் பின்வாங்கிக் கொண்டது. அது முதல் அக்சை–சின் சீனாவின் வசமானது. அருணாசலப் பிரதேசம் இந்தியாவிடம் தங்கியது. இதன் பின்னரும் எல்லைக்கோடு குறித்த தர்க்கம் நீடித்தது. ஒரு கட்டத்தில் தற்காலிக ஏற்பாடாக யார்யாரிடம் எந்தெந்தப் பகுதிகள் உள்ளனவோ அவை அவரவரின் கட்டுப்பாட்டில் நீடிக்கும் என்று முடிவாகியது. அப்படியான எல்லையைப் பிரிக்கும் கோடுதான் நடப்புக் கட்டுப்பாட்டுக் கோடு (Line of Actual Control – LAC).

இந்த நடப்புக் கட்டுப்பாட்டுக்

கோட்டிலும் சில இடங்களில் ஒத்துசைவு இல்லை. எனினும் பெருமளவில் இணக்கம் இருந்தது. சீனா அவ்வப்போது இந்தக் கோட்டைத் தாண்டும். ரணுவ மட்டத்திலோ அமைச்சர்கள் மட்டத்திலோ பேச்சுவார்த்தைகள் நடக்கும். சமாதானமாகும். ஆனால், 2020ல் கால்வானில் நடந்த கைகலப்பு முந்தைய உரசல்களைப் போன்றதில்லை. இப்போது தவாங்கில் நடந்திருப்பதும் கைகலப்புத்தான். தவாங்கில் வீரர்கள் காயமுற்றனர். உயிரிழப்பு இல்லை.

இப்போது ஒரு கேள்வி எழலாம். ஏன் கால்வானிலும் தவாங்கிலும் கைகலப்புகள் நடந்தன? ஏன் யாரும் ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை? ஏனெனில், 1996ல் நடந்த பேச்சுவார்த்தையில் எல்லையில் ஆயுதங்களைப் பயன்படுத்துவது இல்லை என்று முடிவாகியது. அந்த உடன்படிக்கையில் உள்ள வார்த்தைகள் அப்படியே பின்பற்றப்படுகின்றன. ஆனால், அந்த உடன்படிக்கையின் உள்நோக்கம் சமாதானம், அது மதிக்கப்படவில்லை. அதனால்தான் கைகலப்பில் ஈடுபடுவதும், கழிகளையும் கம்புகளையும் பயன்படுத்தித் தாக்குவதும் நடக்கிறது.

கால்வான் சம்பவத்தைத் தொடர்ந்து சீனத் துருப்பு பாங்காங் ஏரி, கோக்ரா ஊற்று முதலான இடங்களிலும் எல்லை தாண்டியது. பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு பின்வாங்கியது. ஆனால், அப்படிப் பின்வாங்கியபோது இந்தியப் பரப்பில் இடையகப் பகுதிகளை ஏற்படுத்தியது. இதில் இரு சாராரும் கால் பதிக்கக்கூடாது. அதாவது ஏற்கெனவே இந்தியா ரோந்துபோன பகுதிகளில் இப்போது போகமுடியாது. இதைத்தவிர, தெப்சாங் சமவெளி எனும் பகுதியில் எல்லை தாண்டிய சீனா, இன்னும் முழுமையாகப் பின்வாங்கவில்லை. அதாவது 2020க்கு முந்தைய நிலை இன்னும் எட்டப்படவில்லை. மேற்கே பிரச்னை இவ்விதம் கனன்று கொண்டிருக்க, இதுகாறும் அடக்கி வாசித்த கிழக்கிலும் இப்போது எல்லை தாண்ட முயற்சித்திருக்கிறது சீனா. ஏன்?

கடந்த நவம்பர் இரண்டாம் வாரம் இந்திய, அமெரிக்கத் துருப்புகள் உத்தரகாண்டில் நடப்புக் கட்டுப்பாட்டுக் கோட்டிலிருந்து 100 கி.மீ. தொலைவில், போர்ப் பயிற்சிகள் மேற்கொண்டன. இதற்கு 'யுத்த அப்பியாஸ்' என்று பெயர். பல வருடங்களாக நடந்து வருவதுதான். ஆனால், இந்த ஆண்டு நடந்த பயிற்சியை சீனா வன்மையாகக் கண்டித்தது. இது 1993, 1996 இந்திய – சீன உடன்படிக்கைகளுக்கு எதிரானது என்றும் விமர்சித்தது. நோக்கர்கள் தவாங் எல்லை தாண்டலை அந்த விமர்சனத்தின் தொடர்ச்சியாகப் பார்க்கின்றனர்.

அப்படியானால் போர் என்பதுதான் சீனாவின் நோக்கமா? இருக்க முடியாது என்கிறார்கள் நோக்கர்கள். பின் இந்தத் தொடர்ச்சியான எல்லை தாண்டலுக்கு என்ன காரணம்? இந்தியாவுக்கு அழுத்தத்தை உருவாக்குவது என்பது நோக்கர்களின் பதில். கடந்த இரண்டரை ஆண்டுகளாகப் பல்லாயிரக்கணக்கான இந்திய வீரர்கள் பனிமலையின் உச்சியில் கடுங்குளிரில் பகலிரவாகக் காவல் காக்க வேண்டிய அவசியத்தை சீனா உருவாக்கிவிட்டது. இந்த அழுத்தம் மேற்கில் மட்டுமல்ல, இனி கிழக்கிலும் இருக்கும் என்பதுதான் தவாங் சொல்லும் செய்தி.

**என்ன செய்யலாம்?**

முதலாவதாக, நாட்டின் எல்லா அரசியல் சக்திகளுக்கும் ஊடகங்களுக்கும் நடப்பதை விரிவாக விளக்கலாம். தவாங் சம்பவத்தை நாடாளுமன்றத்தில் விவாதிக்கக் கோரின எதிர்க்கட்சிகள். இரு அவைகளின் தலைவர்களும் நிர்தாட்சண்யமாக மறுத்துவிட்டார்கள். மோடியின் ஆட்சியில் இந்திய எல்லைக்குள் யாரும் ஊடுருவ முடியாது என்று பேசினார் உள்துறை அமைச்சர் அமித் சா. இந்த அணுகுமுறை மாறவேண்டும். இது ஓர் ஆளும் கட்சியின் பிரச்னை அல்ல. இது தேசத்தின் பிரச்னை. திறந்த உரையாடல்கள் நாட்டின் எல்லா சக்திகளையும் ஓரணியில் கொண்டு வரும்.

இரண்டாவதாக, அமெரிக்காவுடனான இந்தியாவின் நெருக்கத்தைச் சீனா விரும்பவில்லை. அந்த நெருக்கம் தனக்குப் பலனளிக்கிறதா என்பதையும் இந்தியா பரிசீலனை செய்துகொள்ள வேண்டும். இதற்கு மாற்றாக இந்திய அரசு அண்டை நாடுகளுடன் நல்லிணக்கத்தைப் பேண வேண்டும். இந்த நாடுகளின் மூலம் சீனாவிற்கு அழுத்தத்தைத் தர முடியும். ஜி 20 முதலான பன்னாட்டுக் கூட்டமைப்பையும் சீனாவிற்கு அழுத்தம் தரப் பயன்படுத்தலாம்.

மூன்றாவதாக, இன்று சீனா, ஒரு பெரும் சக்தியாகவும் அச்சுறுத்தலாகவும் வளர்ந்திருப்பதற்கு, அது உலகின் தொழிற்சாலையாக மாறி பொருளீட்டி வருவதுதான் காரணம். இந்தியாவிலும் மனிதவளம் இருக்கிறது. நம் மக்கள் திரளுக்குக் கல்வியும் மருத்துவமும் இலவசமாக வழங்க வேண்டும். அப்போது அவர்கள் நவீனத் தேவைக்கேற்ற உழைப்புச் சக்தியை வழங்குவார்கள். இந்தியா உலகின் இன்னொரு தொழிற்சாலை ஆகும். மக்களின் வாழ்வு மேம்படும். செல்வம் சேரும். பன்னாட்டு அரங்கில் இந்தியா பெரும் சக்தியாக மாறும். அப்போது இந்தியாவின் குரலைச் சீனாவால் புறக்கணிக்க முடியாமலாகும்.

போர் அல்ல, சமாதானமே நல்வாழ்வு தரும். அதைச் சொல்வதற்கு வீரம் வேண்டும். விவேகமும் வேண்டும்!

(இக்கட்டுரையாளர் மு.இராமநாதன் ஹொங்கொங்கின் பதிவுபெற்ற பொறியியலாளர். அத்துடன் பிரித்தானியாவின் 'சார்ட்டட்' பட்டம் பெற்ற பொறியியலாளரும் கூட. இவர் பல்வேறு நாடுகளில் பணியாற்றியிருக்கிறார். இவர் எழுதிய உலக அரசியல், சமூகம், பண்பாடு, மதம், கலை இலக்கியம், பொறியியல் சம்பந்தமான கட்டுரைகள் பன்னாட்டு ஆய்விதழ்களில் வெளியாகியுள்ளன)

## சர்வதேச நாணய நிதி குறித்து வெளியிடப்பட்டுள்ள தகவல்

இதுவரை இல்லாத மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கை, 2.9 பில்லியன் டொலர்களுக்கான கடனைப் பெற்றுக்கொள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தினுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது. ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவது சில சமயங்களில் விரும்பத்தகாததாக இருக்கும் என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

நிதி நல்லிணக்கத்தைப் பேணுவது இன்றியமையாதது என்றும், அதற்காக அரசியலமைப்பு ஏற்பாடுகள் போன்ற சட்ட காரணிகளால் நிதி முகாமைத்துவம் ஆதரிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியை அபிவிருத்தி வங்கியாகக் கருதாது அதன் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அக்கறை செலுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# புரட்சிக்கு ஒரு நாள் முன்பாக லெனின் எழுதிய கடிதம்!

ரஷ்யாவில் நடைபெற்ற 1917 ஆம் ஆண்டு பெப்ரவரி புரட்சிக்குப் பின் எட்டு மாதங்களில் லெனினின் எழுத்துகள் அனைத்துமே புரட்சியின் பாதையில் போல்ஷ்விக் புரட்சியாளர்களிடையே நிலவிய சித்தாந்த குழப்பங்களை, தயக்கங்களை நீக்கும் வகையில் இருந்தன.

கீழ் காணும் கடிதம் லெனின் அவர்கள் ஒக்ரோபர் புரட்சிக்கு ஒரு நாள் முன்பு மத்திய குழு உறுப்பினர்களுக்கு எழுதிய கடிதம் ஆகும். இதில் அவர், வரலாற்றில் மிக முக்கியமான தருணங்களை புரட்சியாளர்கள் உணராமல், மக்களின் புரட்சிகர உணர்வுகளை புரிந்து கொள்ளாமல் போவது எவ்வாறு மாபெரும் குற்றமாக விளையும் என்பதை விளக்குகிறார்.


ரஷ்ய புரட்சி அரங்கேறிய தேதி, தற்போது புழக்கத்தில் உள்ள ஜோர்ஜியன் (Gregorian) நாள்காட்டி முறைப்படி நவம்பர் 7ந் திகதி ஆகும். ஆனால் 1917 ஆம் ஆண்டில், ரஷ்யாவில் ஜூலியன் (Julian) நாள்காட்டி முறை பழக்கத்தில் இருந்து. அது ஜோர்ஜியன் நாள்காட்டி முறையை விட 13 நாட்கள் பின் தங்கியது. அதன்படி புரட்சி அரங்கேறிய திகதி ஒக்ரோபர் 25. அதனால் இந்த கடிதத்தில் திகதிகள் "ஒக்ரோபர்" மாதத்தில் என குறிப்பிடப்பட்டுள்ளன.

---

**தோழர்களே,**

நான் 24ஆம் திகதி மாலையில் இவ்வரிகளை எழுதுகிறேன். மிக மிக முக்கியமான நிலமையை எட்டியுள்ளோம். இப்போது எழுச்சியை தாமதிப்பது என்பது மிகவும் ஆபத்தாக விளையும் என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது.

அனைத்துமே ஒரு நூல் இழையில் தொங்கிக் கொண்டிருக்கிறது என்பதை தோழர்கள் உணர என் மொத்த சக்திகளையும் கொண்டு வற்புறுத்துகிறேன் எந்த சம்மேளனங்களோ, மாநாடுகளோ (சோவியத் மாநாடு உட்பட) தீர்க்க முடியாத பிரச்சனைகளை சந்தித்து வருகிறோம். இவை மக்களால், ஜன சக்தியால், ஆயுதம் தாங்கிய மக்களின் போராட்டத்தால் மட்டுமே தீர்க்க முடியும்.



"கோர்னிலோவ்"களின்[1] முதலாளித்துவ சர்வாதிகார தாக்குதல்களும், வெர்கோவ்ஸ்க்கி[2] நீக்கப்பட்டுள்ளதும், நாம் தாமதிக்க முடியாது என்பதை காட்டுகிறது. எந்த நிலையிலும், இன்று மாலையே, இன்று இரவே, நாம் முதலில் இராணுவ அதிகாரிகளின் ஆயுதங்களை பறிமுதல் செய்து (அவர்கள் தடுத்தால், அவர்களை வீழ்த்தி), இந்த அரசாங்கத்தை கைது செய்து, முன்னேற வேண்டும்.

நாம் காத்திருக்க கூடாது! நாம் அனைத்தையும் இழக்கக் கூடும்!

உடனடியாக அதிகாரத்தை கைப்பற்றுவதன் பலனானது மக்களுக்கானதாய் (மாநாடு அல்ல. மக்களுக்கு. குறிப்பாக முதலில் இராணுவ வீரர்களுக்கும்[3] மற்றும் உழவர்களுக்கும்), இந்த கோர்னிலோவிய அரசாங்கத்திடம் இருந்து அவர்களை காப்பதாய் இருக்கும். இந்த அரசாங்கம்தான் வெர்கோவ்ஸ்க்கியை வெளியேற்றி, இரண்டாம் கோர்னிலோவ் சதியை[4] வடிவமைத்தது.

யார் அதிகாரத்தை கையிலெடுக்க வேண்டும்?

இந்த கேள்வி இப்போது முக்கியம் இல்லை. வேண்டுமென்றால், புரட்சிகர இராணுவக் குழு எடுக்கட்டும். இல்லையென்றால், மக்களின் நலனை பாராட்டும் உண்மையான பிரதிநிதிகளுக்கு, (உடனடியாக அமைதிக்கான முன்மொழிவு மேற்கொண்டு) இராணுவ வீரர்களின் நலனை காப்பவர்களுக்கு, (உடனடியாக நிலக்கிழார் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, தனிச்சொத்தை ஒழிக்கும்) உழவர்களின் நலனை காப்பவர்களுக்கு, பட்டினியில் வாடுபவர்களின் நலனை காப்பவர்களுக்கு மட்டுமே அதிகாரத்தை விட்டுத் தருவோம் எனக் கூறும் "ஏதோ ஒரு நிறுவனம்" அதிகாரத்தை கையிலெடுக்கட்டும்.

அனைத்து இராணுவ அமைப்புகளும், அனைத்து சேனைகளும், எல்லா படைகளும் உடனடியாக திரட்டப்பட்டு, அவர்களின் பிரதிநிதிகளை புரட்சிகர இராணுவ குழுக்களுக்கும், போல்ஷ்விக்களின் மத்தியக் குழுக்கும் அனுப்பி, எந்த நிலையிலும் 25ஆம் திகதி வரை கெரென்ஸ்க்கி[5] மற்றும் அவர் கூட்டாளிகள் கையில் அதிகாரத்தை விட்டு வைக்கக் கூடாது என்ற பிரத்தியேக கோரிக்கையை வைக்க வேண்டும். இந்த விஷயம் இன்று மாலையே, இன்று இரவே, உடனடியாக முடிவு செய்யப்பட வேண்டும்.

இன்று வெற்றி பெறும் சாத்தியம் இருக்கையில் (இன்று வெற்றி நிச்சயம்), நாளை பெருமளவில் இழக்க, உண்மையில் அனைத்தையும் இழக்க வாய்ப்பு இருக்கையில், மேலும் தாமதித்தால், வரலாறு புரட்சியாளர்களை மன்னிக்காது.

இன்று நாம் அதிகாரத்தை கைப்பற்றுவது சோவியத்களுக்கு[6] எதிராக அல்ல, அவர்களின் சார்பாக.

எழுச்சியின் பிரதான பணியே அதிகாரத்தை கைப்பற்றுவதுதான் கைப்பற்றிய பின், எழுச்சியின் அரசியல் கடமை குறித்த தெளிவு கிடைக்கும்.

ஒக்ரோபர் 25ஆம் திகதியின் ஊசலாடும்

வாக்களிப்பிற்காக காத்திருப்பது என்பது வெறும் ஒரு சடங்காகவோ, அல்லது அபாயகரமாகவோ கூட முடியக் கூடும். இந்த மாதிரியான கேள்விகளுக்கு முடிவை வாக்களிப்பு மூலம் அல்லாமல், வன்முறை மூலம் தீர்மானிக்க, கடமையும் உரிமையும் மக்களுக்கு உண்டு. புரட்சியின் மிக முக்கியமான தருணங்களில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளுக்காக, மிகச் சிறந்த பிரதிநிதிகளுக்காகவும் காத்திருக்காமல், பிரதிநிதிகளுக்கு வழிகாட்டுதல் கொடுக்கும் கடமையும், உரிமையும் கூட மக்களுக்கு உண்டு.

அனைத்து புரட்சிகளின் வரலாறும் இதை நிறுவி உள்ளது. புரட்சியை காப்பாற்றுவதும், அமைதிக்கான வாய்ப்பை உருவாக்குவதும், பெட்ரோகார்ட் நகரத்தை காப்பாற்றுவதும், பஞ்சத்திலிருந்து காப்பாற்றுவதும், உழவர்கள் நில உரிமை பெறுவதும் தங்களை சார்ந்தே உள்ளது என புரட்சியாளர்கள் அறிந்திருந்தும், இந்த வாய்ப்பை தவற விட்டால், அது அளவற்ற பெரும் குற்றமாக விளையும்.

இந்த அரசாங்கம் ஊசலாடிக்கொண்டு இருக்கிறது. எந்த நிலையிலும், அதற்கு இறுதி அடி கொடுக்கப்பட்டே ஆக வேண்டும்.

செயல்பாடுகளை மேலும் தாமதிப்பது அபாயகரமாக ஆகிவிடும்.

குறிப்புகள்:

[1] இராணுவ தளபதி கோர்னிலோவ் தலைமையிலான பிற்போக்கு அமைப்பு
[2] கோர்னிலோவை எதிர்த்த அமைச்சர்
[3] முதலாம் உலகப் போரில் அவதிப்பட்டு வந்த ரஷ்ய இராணுவம் மற்றும் சாதாரண சிப்பாய்கள்
[4] ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் இராணுவ ஆட்சியை நிறுவும் முயற்சி
[5] பெப்ரவரி புரட்சிக்குப் பிந்தைய முதலாளித்துவ அரசின் தலைவர்
[6] தொழிலாளர் கமிட்டிகள்

**தமிழில்: அபிநவ் சூர்யா**

(இருபதாம் நூற்றாண்டின் புரட்சிகர அரசியல் தலைவராக விளங்கியவர் விளாதிமிர் லெனின். இவர் 1870 ஏப்ரல் 20ந் திகதி ரஷ்யாவின் சிம்பிர்ஸ்க் (Simbirsk) நகரில் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார். கார்ல் மார்க்ஸின் சித்தாந்தத்தைப் பின்பற்றிய லெனின், ரஷ்யாவில் போல்ஷ்விக் (பொதுவுடமை) கட்சி வலுபெறுவதற்கு காரணமாக இருந்தார். போல்செவிக் கட்சியின் தலைவரான லெனின், ஒரு புரட்சிகர சமூகமயமாக்கலை உருவாக்க அயராது பாடுபட்டார்.

முதலாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்த வேளையில் 1917 இல் 2 புரட்சிகள் நடந்தன. இதில் ஒக்ரோபர் புரட்சி சாதகமாக அமைந்தது. இதைத்தொடர்ந்து சோவியத் ஒன்றியத்தின் முதல் அதிபராக பதவியேற்றார் லெனின். மாபெரும் அரசியல் கோட்பாட்டாளரான லெனின், 1924 வரை தலைமை வகித்தார். பின் 1924 ஆம் ஆண்டு ஜனவரி 21 இல் மாஸ்கோவில் இறந்தார்)

# சீனாவில் 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மக்கள் தொகை சரிவு

சீனாவின் மக்கள்தொகை கடந்த 60 ஆண்டுகளில் முதல்முறையாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், தேசிய பிறப்பு விகிதம் குறைந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

சீனாவில் 1961 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக 2022 ஆம் ஆண்டில் மக்கள் தொகை எண்ணிக்கை குறைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் சீன மக்கள் தொகை எண்ணிக்கை 1.41260 பில்லியன் ஆக இருந்த நிலையில் 2022 ஆம் ஆண்டின் முடிவில் சீனாவில் 1.41178 பில்லியன் மக்கள் மட்டுமே உள்ளதாகவும் சீன தேசிய புள்ளியியல் அமைப்பு தெரிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் சீனாவில் 1000 பேருக்கு 7.52 என்ற குழந்தை பிறப்பு விகிதம் இருந்த நிலையில் தற்போது 2022 ஆம் ஆண்டில் இதன் அளவு 6.77 ஆகக் குறைந்துள்ளது. மேலும் இறப்பு விகிதம், பிறப்பு விகிதத்தைவிட அதிகரித்திருக்கிறது. கடந்த ஆண்டு இறப்பு விகிதம் 7.18 ஆக உள்ளது.

2016 ஆம் ஆண்டிலேயே ஒரு குழந்தை கொள்கையை சீன அரசு தளர்த்தியது. மேலும், கடந்த ஆண்டு முதல் தம்பதிகள் மூன்று குழந்தைகளைப் பெறவும் அந்த நாடுஅனுமதி வழங்கியது.



இருந்தபோதும் கடந்த சில ஆண்டுகளாகவே சீனாவில் பிறப்பு விகிதம் வரலாறு காணாத அளவிற்கு சரிந்துள்ளது.

இந்த நிலை தொடர்ந்தால் சீனாவில் 2035 ஆம் ஆண்டில் வயதானவர்கள் மட்டும் அதிகளவில் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது சீனாவின் மக்கள் தொகையில் 60 வயதிற்கும் மேற்பட்டோர் 30 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளனர்.

இதனால் சீனாவின் மாகாணங்கள் குழந்தை பிறப்பு விகிதத்தை அதிகரிக்க பல்வேறு திட்டங்கள் மற்றும் சலுகைகளையும் அறிவித்து வருகிறது. மூன்று குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள் வீட்டு கடனுக்கு விண்ணப்பிக்கும் போது அதிகபட்ச வரம்பை விட 20 சதவீதம் அதிகமாக கடன் வாங்க முடியும் என்று சீனாவின் ஹாங்சோ மாகாணம் அறிவித்துள்ளது. நான்சாங் மற்றும் சாங்ஷா மாகாணங்களும் அதிக குழந்தைகளை பெற்றுக் கொள்பவர்களுக்கு சலுகை திட்டங்களை உருவாக்கியுள்ளன. சீனா மட்டுமல்ல கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளிலும் மக்கள் தொகை குறைந்து வருகின்றது.

**முன்பக்கத்தொடர்ச்சி...**

சுமந்திரன் இரண்டு நோக்கங்களைக் கருதியே இந்த நிலைப்பாட்டை எடுத்தார். முதலாவது விடயம், தமிழரசுக் கட்சியை ஆயுத வன்முறையில் ஈடுபடாத அகிம்சை வழியைப் பின்பற்றும் ஒரு ஜனநாயகக் கட்சியாகக் காட்டுவது. இரண்டாவது, தமிழ் ஈழம் என்ற தனிநாட்டுக் கருத்தை நிராகரித்து, தமிழரசுக் கட்சியை ஐக்கிய இலங்கைக்குள் தமிழருக்கு நீதியான அதிகாரப் பகிர்வு கோரும் கட்சி என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது.

ஏனெனில், சுமந்திரன் தென்னிலங்கையிலுள்ள முதலாளித்துவ அரசியல் சக்திகளுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பவர். அதேபோல மேற்கத்தைய ஏகாதிபத்திய – முதலாளித்துவ நாடுகளுடனும் நெருங்கிய தொடர்பில் இருப்பவர். இந்த இரு சக்திகளுடனும் உறவைப் பேணுவதானால், தமிழரசுக் கட்சி பயங்கரவாதத்துக்கும் நாடு பிரிவினைக்கும் எதிரானது என்ற ஒரு தோற்றப்பாட்டை உண்மையிலேயே காட்ட வேண்டிய தேவை அவருக்கு இருக்கின்றது. சம்பந்தனுக்குப் பிறகு தமிழரசுக் கட்சியின் தலைமைக்கு வரக்கூடியவர் என்ற வகையில் அவருக்கு இந்தத் தேவை மிகவும் அவசியமானது. அத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு புலிகளல் உருவாக்கப்பட்டதால், அந்தப் பிம்பத்தையும் அழித்துவிட அவர் விரும்புகிறார்.

அதனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் முன்னாள் ஆயுதப் போராட்ட இயக்கங்களான புளொட்டையும், ரெலோவையும் அதிலிருந்து நீக்கி தமிழரசுக் கட்சியைச் ‘சுத்தம்’ செய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தார். அதற்கு ஏதுவாக ‘காகம் இருக்க பனம்பழம் விழுந்த’ கதையாக உள்ளூராட்சித் தேர்தல் வந்து அவருக்குக் கைகொடுத்தது.

இப்பொழுது தமிழரசுக் கட்சி உள்ளூராட்சித் தேர்தலில் தனியாகப் போட்டியிடுகின்றது. கூட்டமைப்பில் இருந்த மற்றைய இரு கட்சிகளும் வேறு மூன்று முன்னாள் ஆயுதக் குழுக்களுடன் இணைந்து ஐந்து கட்சிக் கூட்டணியாகத் தேர்தலில் களம் இறங்கி உள்ளன.

இப்பொழுது வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் சார்பில் 6 அணிகள் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்றன. அவையாவன: தமிழரசுக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், தமிழ் தேசிய மக்கள் முன்னணி, 5 கட்சி கூட்டமைப்பு, முன்னாள் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தலைமையிலான அணி.

இந்தத் தேர்தலில் போட்டியிடும் தமிழ் கட்சிகளின் பலம் பலவீனத்தையும், எதிர்கால இருப்பையும் தீர்மானிக்கும் ஒரு தேர்தலாக இது அமைய வாய்ப்பு உள்ளது. தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை, தாங்கள் எப்படிச் செயற்பட்டாலும், என்னத்தைச் சொன்னாலும், தமிழ் மக்கள் தங்களுக்கே வாக்களிப்பார்கள் என்ற இறுமாப்புடன்தான் இருக்கின்றது. ஆனால் தமிழரசுக் கட்சி வரலாற்றில் நடந்த சில விடயங்களை மறந்துவிட்டது போல இருக்கிறது. அதற்கு தமிழ் மக்களினதும் கட்சியினதும் வரலாறு தெரியாத சுமந்திரனின் ஆதிக்கம் அந்தக் கட்சிக்குள் ஏற்பட்டிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

1976 ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழர் அரசியலில் தமிழரசுக் கட்சியும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியுமே இரண்டு பிரதான கட்சிகளாகச் செயற்பட்டன. இவ்விரண்டு கட்சிகளும் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடுவதாகச் சொல்லிக்கொண்டாலும், எதிரும் புதிருமாக, கீரியும் பாம்புமாகவே செயற்பட்டு வந்தன.

இவர்களது ஏமாற்று அரசியலில் வெறுப்புற்ற தமிழ் மக்கள் 1970 பொதுத்தேர்தலில் இரண்டு கட்சிகளினதும் தலைவர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலம், அ.அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம், டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன், மு.ஆலாலசுந்தரம் ஆகியோரைத் தேர்தலில் தோற்கடித்துப் பாடம் புகட்டினர். அந்தத் தேர்தலில் தமிழ்மக்கள் கொடுத்த சூடு காரணமாகவே 1976 இல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக ‘தமிழீழ’ தீர்மானம் நிறைவேற்றியதுடன், தமிழரசும் காங்கிரசும் ஒன்று சேர்ந்து ‘தமிழர் விடுதலைக் கூட்டணி’ என்ற புதிய அமைப்பொன்றையும் உருவாக்கின. மக்கள் மீண்டுமொருமுறை ஏமாற்றபபட்டனர். அந்த ஏமாற்று வேலை இன்றுவரை தொடர்கிறது.

மீண்டுமொரு புதிய முறையிலான ஏமாற்று வேலைக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பைக் கலைத்துவிட்டு, தனித்தனிக் கட்சிகளாக உள்ளூராட்சி தேர்தலில் நிற்பதற்கு முடிவெடுத்துள்ளனர். ஆனால் இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சியோ மற்றை கட்சிகளோ எதிர்பார்த்த அளவு மக்கள் ஆதரவைப் பெறுவார்களா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. முக்கியமாக தமிழரசுக் கட்சி எதிர்பார்ப்பது போல தமிழ் மக்கள் வீட்டுச் சின்னத்துக்கு வாக்குகளை அள்ளிப் போடுவார்களா என்ற கேள்வி இருக்கிறது.

ஏனெனில், தமிழரசுக் கட்சிக்கு கண்ணை மூடிக்கொண்டு மக்கள் வாக்குகளை அள்ளிப்போட்ட காலம் மலையேறிவிட்டது. அதனால்தான் தமிழரசுக் கட்சியின் முந்திய தலைமுறைத் தலைமையே காங்கிரஸ் கட்சியைச் சேர்த்துக்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி என நாடகமாடியது. அதன் பின்னர் இன்றைய தலைமையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இதுநாள்வரை சேடமிழுத்து வந்தது. அவர்களது கதை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைதான். புலிகள் காலத்தில் புலிகளின் ஆதரவுடன் கள்ள வாக்குப்போட்டு 22 உறுப்பினர்களை நாடாளுமன்றம் அனுப்பினார். அந்த எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வந்து கடைசித் தேர்தலின் போது பத்தாக வீழ்ச்சி அடைந்தது.

அதுவுமல்லாமல், தமிழரசுக் கட்சியின் ஆதார வாக்களர்கள் பலர் நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்து விட்டனர். இப்பொழுது இருக்கும் வாக்காளர்களில் ஏறத்தாழ பாதிப்பேர் 2000 ஆண்டுக்கு முன் பின்பாகப் பிறந்த இளைஞர்கள். அவர்களது வாக்குகள் யார் யாருக்கு அளிக்கப்படும் என்பது தெளிவில்லாத விடயம். எனவே, இந்தத் தேர்தலில் சுமந்திரனின் தலைக்கனமும் சர்வாதிகாரப் போக்கும் காரணமாக தமிழரசுக் கட்சி ஒருவேளை மண்ணைக் கவ்வக் கூடும்.

இன்னொரு விடயத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டுவது

அவசியமானது. தமிழ் அரசியலில் தற்போது ஏற்பட்டிருக்கும் பிரிவுகளும் புதிய அணிசேர்க்கைகளும் இன்னொரு வகையில் தமிழர்கள் மத்தியில் உள்ள வர்க்க வேறுபாட்டு நிலைப்பாட்டையும் கூட எடுத்துக் காட்டுகிறது.

முன்னைய காலங்களில் தமிழர் அரசியலில் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் என இருகட்சிகள் ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டாலும், இரண்டு கட்சிகளும் பழமைவாதமும், நிலப்பிரபுத்துவ – முதலாளித்துவத் தன்மையும், சாதிவெறியும் பிடித்த தமிழ் மேட்டுக்குடியினரின் பிரதிநிதிகளாகவே இருந்தனர். தமிழ் இளைஞர்களின் இயக்கங்கள் உருவான பின்னரே ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினரையும் உள்ளடக்கிய தமிழ் குட்டிமுதலாளித்துவ சக்திகளின் பிரதிநிதித்துவ சக்திகள் அரசியல் அரங்குக்கு வந்தன. ஆரம்ப கட்டத்தில் புலிகளும் அவ்வாறான சக்திகளில் ஒன்றாக இருந்த போதிலும், பின்னர் தமிழ் மேட்டுக்குடியினரினதும் ஏகாதிபத்திய சக்திகளினதும் செல்லப்பிள்ளைகளாக மாறி ஏனைய குட்டி முதலாளித்துவ இயக்கங்களை அழித்தனர். எஞ்சியோரை மிரட்டி பிற்போக்கு தமிழரசுக் கட்சியின் தலைமையில் செயற்பட வைத்தனர். புலிகளின் அழிவுக்குப் பின்னர் காட்சிகள் மாறிவிட்டன.

இப்பொழுது பழையபடி தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும் தமிழ் பிற்போக்கு மேட்டுக்குடியினரின் பிரதிநிதிகளாக (தனித்தனியாக) மாறிவிட்டனர். அந்த அணியில் புதிதாக விக்னேஸ்வரன் தலைமையிலான அணியும் இணைந்துள்ளது.

மறுபக்கத்தில், தமிழ் குட்டி முதலாளித்துவ சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் ஆயுதப் போராட்ட அமைப்புகள் இரண்டு மூன்று அணிகளாக இத்தேர்தலில் போட்டியிடுகின்றன. அதில் ஒரு அணிதான் கூட்டமைப்பால் விரட்டப்பட்ட ஐந்து கட்சிக் கூட்டணி. அவைகள் சந்தர்ப்பவாத அணிகளாக – பதவிக்கு விலைபோகும் அணிகளாக இருந்தாலும் அவைகளின் வர்க்க அடிப்படை குட்டி முதலாளித்துவம்தான். எனவே ஒப்பீட்டு வகையில் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் மற்றும் விக்னேஸ்வரன் அணிகளை விட சற்று முற்போக்கானவை.

எனவே, இத்தேர்தலை இன்னொரு வகையில் தமிழ் நிலப்பிரபுத்துவ – முதலாளித்துவ – மேட்டுக்குடிப் பிரதிநிதிகளுக்கும், தமிழ் குட்டி முதலாளித்துவப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெறும் தேர்தல் போட்டியாகவும் கொள்ளலாம்.

ஆனால் மக்கள் இன்னமும் போதிய அளவு அரசியல் விழிப்புணர்ச்சி அற்று இருப்பதால் என்ன செய்யப் போகிறார்கள், யாரை ஆதரிக்கப் போகிறார்கள் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

---

**7ம் பக்கத்தொடர்ச்சி...**

ஆட்கடத்தல் வேலைகள் நடக்கின்றன. குறிப்பாகப் பெண்களும், குழந்தைகளும் பாதுகாப்பற்ற நிலையில் தள்ளப்படுகிறார்கள். மத்தியத் தரைக்கடல் பகுதியைக் கடப்பது எளிதானது இல்லை என்பதால் வேறு வழியில்லாமல் எதற்கும் தயாரான நிலைக்கு மக்கள் மாறுகின்றனர்.

**யேமன் (Yemen)**

கடந்த ஏழு ஆண்டுகளாக யேமன் மீது அமெரிக்க ஆதரவுடன் சவூதி அரேபியா தாக்குதல் நடத்தி வருகிறது. அங்குள்ள அரசை அகற்றி விட்டுத் தனது ஆதரவு அரசை அமைப்பதே அவர்களின் நோக்கமாக உள்ளது. அந்த எண்ணம் இதுவரையில் நிறைவேறவில்லை. இந்நிலையில் தொடர் தாக்குதல்களால் யேமன் நாட்டு மக்களே பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். அந்நாட்டில் இருந்து இதுவரையில் 43 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்திருக்கிறார்கள். யேமனில் உள்ள ஐ.நா.வின் குடியேற்ற அமைப்பு மற்றும் ஐரோப்பிய மனித உரிமை அமைப்பு (European Civil Protection and Humanitarian Aid Operations - ECHO) ஆகியவை தங்களது செயல்பாடுகளை விரிவாக்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளன. இந்த நெருக்கடி குறித்துக் கருத்து தெரிவித்த ஐ.நா. குடியேற்ற அமைப்பின தலைவர் கிரிஸ்டா ரொட்டன்ஸ்டெய்னர் (Christa Rottensteiner), “யேமனில் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது. உள்நாட்டிலே இடம் பெயர்ந்தவர்கள் நெருக்கடியில் இருக்கிறார்கள். குறிப்பாகப் பெண்கள், தங்கள் வாழ்வின் மீது எந்தவிதப் பிடிப்பும் இல்லாமல் வாழ்கின்றனர்” என்று குறிப்பிட்டுள்ளார். தற்போதைய குளிர்காலம் இடம் பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு பெரும் சவாலாக அமையப் போகிறது என்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் நல ஆணையம் எச்சரித்திருக்கிறது.

---

**9ம் பக்கத்தொடர்ச்சி...**

நடத்தப்பட்டாலும், இது போன்ற சூழல் நிலவவில்லை என்று இருதரப்பும் கருத்து தெரிவித்துள்ளன. இந்தப் பேச்சுவார்த்தை புதியதாக இருந்தாலும், ஏற்கனவே பேசப்பட்ட அம்சங்களையும் எடுத்துக் கொண்டார்கள். இந்தப் பேச்சுவார்த்தை நவம்பர் 21, 2022 அன்று தொடங்கியது. இதில் பங்கேற்ற கொலம்பியாவின் நாடாளுமன்ற உறுப்பினர் மரியா ஜோஸே பிசார்ரோ (María José Pizarro), “நாடு குறித்த இருதரப்பின் பார்வைகளையும் நாங்கள் புரிந்து கொள்ள முடிந்தது. அரசியல் உரையாடல்களைத் தாண்டி இரு தரப்புக்கும் கொலம்பியாவுக்கான பொது நலன், கொலம்பியா மீதான காதல் இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டோம்” என்றார்.

அடுத்தகட்ட பேச்சுவார்த்தை நடப்பாண்டில் மெக்சிகோவில் நடைபெறவுள்ளது. பேச்சுவார்த்தைக்கு உறுதியளிக்கும் வகையில் கியூபா, நோர்வே மற்றும் சிலி ஆகிய நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. உடன் பயணிப்பவர்களாக ஐக்கிய நாடுகள் சபையும், கத்தோலிக்க திருச்சபையும் இதற்கு ஒப்புக்கொண்டுள்ளன. இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்குமாறு அமெரிக்காவுக்கு அழைப்பு விடுத்துள்ளார்கள். ஆனால் அவர்களிடமிருந்து சாதகமான பதில் எதுவும் வரவில்லை.

---

**11ம் பக்கத்தொடர்ச்சி...**

சர்வதேச நாணய நிதியம் ஆதரவளித்தாலும் இல்லாவிட்டாலும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் செயற்படுத்தப்பட்ட மானியத் திட்டத்திற்கு அதிகப் பணம் செலவழித்ததன் காரணமாக வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை மேலும் அதிகரித்து இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு காரணமாக அமைந்தது என முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மக்களைப் பாதுகாத்த சோசலிசம்



உலகம் முழுவதும் கடுமையான விலை உயர்வைச் சந்தித்து வரும் வேளையில், உள்நாட்டில் பொருட்களின் விலைகளை உயர விடாமல் பார்த்துக் கொள்வதில் சீனா வெற்றி பெற்றுள்ளது. இது குறித்துப் பல்வேறு புள்ளிவிபரங்களை சீன வல்லுநர்கள் வெளியிட்டுள்ளனர். ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவில் இதுவரை இல்லாத அளவுக்கு பணவீக்கம் பெரும் நெருக்கடியாக மாறியிருக்கிறது. அதேவேளையில், சீனாவில் நிலையான விலைவாசி நிலவுகிறது. அரசின் தலையீட்டால் நுகர்வோர் குறியீட்டு எண் வெறும் 2 விழுக்காடு மட்டுமே அதிகரித்துள்ளது. அனைத்து கோணங்களிலும் உணவுப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கான பணியில் அரசு இறங்கியது. அத்தோடு, நிலையான மற்றும் பாதுகாப்பான எரிபொருள் விநியோகத்தைத் தருவதில் முன்னின்றிருக்கிறார்கள். கோவிட் பெருந்தொற்று மற்றும் அமெரிக்காவால் விதிக்கப்பட்ட பல்வேறு பொருளாதாரத் தடைகள் ஐரோப்பிய நாடுகளைக் கடுமையாகப் பாதித்துள்ளன. எரிபொருளுக்காக ரஷ்யாவை நம்பியிருந்த ஐரோப்பிய நாடுகள் பற்றாக்குறையால் திண்டாடுகின்றன. நிறுவனங்களும் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் தொழிலாளர்கள் போராட்டக்களத்தில் உள்ளனர். தொழிற்சங்கங்களில் இணையும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் அதிகமாகியிருக்கிறது.

உலகம் முழுவதும் நெருக்கடி ஏற்பட்டு வருவதாக வல்லுநர்கள் சொல்லி வந்தாலும், தனது பொருளாதாரத்தை நிலைக்க வைப்பதில் சீனா வெற்றி பெற்றுள்ளது. கொரோனா பெருந்தொற்றுக்குப் பின்னால் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் 33 புதிய கொள்கைகளை சீனா திட்டமிட்டது. ஒன்றுபட்ட உள்ளூர் சந்தை, புதிதாக நடைமுறைக்கு வந்த மதிப்பு வரியை திரும்பக் கொடுத்தது, கல்லூரியில் பட்டப் படிப்பை நிறைவு செய்து வந்தவர்களுக்கு வேலைகள் தருதல் உள்ளிட்டவற்றை கறாராக நடைமுறைப்படுத்தினார்கள். கிராமப்புறங்களில் புதிய வேலைகள் உருவாக்கப்பட்டதால் அப்பகுதிகள் முன்னேற்றத்தைக் கண்டன.

## கட்டுப்பாட்டுக்குள் பணவீக்கம்

ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் பணவீக்கம் கடுமையாக அதிகரித்துள்ள நிலையில், சீனாவில் 2 விழுக்காட்டிற்குள் வைப்பதில் சீனா வெற்றி கண்டுள்ளது. ஏற்கனவே உணவுப் பாதுகாப்பில் சீனா பெரும் முன்னேற்றம் கண்ட நாடாகும். அந்த அடித்தளத்தை மீண்டும் உறுதிப்படுத்துவதில் சீனா கவனம் செலுத்தியது. நிலையான மற்றும் பாதுகாப்பான எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்தியதால் விலைவாசி உயர்வைக் கட்டுக்குள் வைக்க முடிந்தது. இதனால் அழுத்தங்களைத் தாக்குப் பிடித்து, சாதகமான பொருளாதார வளர்ச்சியைக் கண்டுள்ளார்கள். 2022 ஆம் ஆண்டின் முதல் பத்து மாதங்களிலேயே முந்தைய ஆண்டின் வர்த்தகத்தை விட 13.3 விழுக்காடு அதிக மான வர்த்தகத்தை சீனா மேற்கொண்டது. தொடர்ந்து இரட்டை இலக்க வளர்ச்சியை ஒவ்வொரு ஆண்டும் அடைந்து வருகிறார்கள். சீனாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 114 இலட்சம் கோடி யுவானைத் தாண்டியுள்ளது. நிதானமான வளர்ச்சியைத் திட்டமிட்டுள்ள சீனாவில் மிகப்பெரும் சந்தை, திறன் வாய்ந்தவர்கள் மற்றும் முதலீட்டிற்கான வாய்ப்புகள் அனைத்தும் இருக்கின்றன. 140 கோடி மக்கள், 90 கோடிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மற்றும் அவர்களில் 22 கோடி தொழில்நுட்ப வல்லுநர்கள் இருப்பதால், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியை சீனாவால் அடைய முடிந்துள்ளது. இந்த சாதனைகளுக்கு சீனாவின் சோசலிசக் கட்டமைப்புகளே காரணம் என்றும், வரும் காலத்தில் மேலும் முன்னேற வாய்ப்புகள் உள்ளன என்றும் பொருளாதார வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

### உலகின் மிகப்பெரும் சந்தை

* ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான நிறுவனங்கள் தொடக்கம். வெளிநாடுகளில் இருந்து படிப்பை முடித்து விட்டு வரும் இளைஞர்கள் இந்த நிறுவனங்களைத் தொடங்குகிறார்கள்.
* பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 16 கோடியாகும். ஒன்றுடன் ஒன்று போட்டிபோட்டுக் கொண்டு, அனைத்துமே வளர்கின்றன.
* பெரும் நுகர்வுச் சந்தையைக் கொண்டுள்ள சீனாவில் சில்லறை வர்த்தகத் துறையில் ஒவ்வொரு நாளும் சராசரியாக 30 கோடி பொட்டலங்கள் (Packets) போடப்படுகின்றன.
* ஆய்வுகளுக்கு செலவிடுவதில் உலகிலேயே இரண்டாவது இடத்தில் சீனா உள்ளது.
* மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வருமானம் ஆண்டுக்கு தலா 12 ஆயிரம் அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளது.
* உலகிலேயே அதிகமான நுகர்வோர்களையும், மிகப்பெரிய சந்தையையும் கொண்ட நாடாக சீனா உருவாகியிருக்கிறது.
* புதிய கண்டுபிடிப்புகள் எண்ணிக்கையில் பத்தாண்டுகளுக்கு முன்பாக 34வது இடத்தில் இருந்த சீனா, தற்போது 11வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.